விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 22 வியாழக்கிழமை (05.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

# மோதலில் ஈடுபட்ட எம்.பிகளுக்கு அதிகபட்சமான ஒழுக்காற்று

## முதற்கட்டமாக இருவரின் பெயர் சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

**நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடுமையான மோதல்களுக்கு காரணமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அதிகபட்சமான ஒழுக்காற்று நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ள சபாநாயகரின் உத்தரவு பெற்ற விசாரணைக்குழு, தனது முதற்கட்ட விசாரணையில் இரு நர்டாளுமன்ற உறுப்பினர்களை மோதல்களுக்கு காரணமானவர்கள் என இனங்காட்டியுள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவப் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டதை தொடர்ந்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் தொடர்பில் அதற்கு காரணமான, ஐ.தே.க உறுப்பினர் பாலித தேவாரப்பெரும மற்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் பிரசன்ன ரணவீர ஆகியோருக்கு எதிராக, அதிகபட்சமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க, விசாரணைக் குழு பரிந்துரைத்துள்ளது.

மேற்படி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மோதல்களில், ஐ.தே.க உறுப்பினர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலும் பலர் சிறுகாயமடைந்தனர். சபை நடவடிக்கைகளும் முற்று முழுதாக பாதிக்கப்பட்டிருந்தது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆசிரியர் மாநாடு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணக் கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் மாநாடு நாளை வெள்ளிக்கிழமை, நாளை மறுதினம் சனிக்கிழமை என இரு தினங்களாக யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (செ)




# 9 கொலைச் சந்தேக நபர்களையும் மேல் நீதிமன்றில் ஆஜராக்குங்கள்

## வித்தியா கொலை வழக்கில் இளஞ்செழியன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை மட்டுமன்றி முழு நாட்டையும் பரபரப்படையச் செய்திருந்த புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வல்லுறவு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 சந்தேக நபர்களையும் யாழ். மேல் நீதிமன்றத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி முன்னிலைப்படுத்துமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றைய தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் விசேட மனு ஒன்றை நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று புதன்று தாக்கல் செய்திருந்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஜனாப் சக்கி இஸ்மாயில் மேல் நீதிமன்றத்தில் தோன்றி சட்டமா அதிபரின் மனுவை விண்ணப்பமாகத் தாக்கல் செய்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா

23ஆம் பக்கம் பார்க்க....

# யாழுக்கு கடத்தப்படவிருந்த முதிரை மரக்குற்றிகள் மீட்பு

## காட்டுக்குள் புகுந்து பொலிஸ் அதிரடி



(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படவிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை மடு பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை

24ஆம் பக்கம் பார்க்க....

# நல்லாட்சியை கவிழ்ப்பதாக கனவு காண்கிறார் மகிந்த

## அசாத் சாலி கண்டிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவப் பாதுகாப்பை வைத்துக் கொண்டு நாட்டின் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்ற கனவில் மிதந்துக் கொண்டிருக்கிறார் என மத்திய மாகாண முன்னாள் உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரி

23ஆம் பக்கம் பார்க்க....

## பேரவையின் தீர்வுத் திட்ட இறுதிவரைபு கனடா, பிரான்ஸிடம் நேற்று கையளிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட இறுதி வரைபு வெளி யிடப்பட்டு அது இந்தியா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகளிடமும் நேற்று கையளிக்கப்பட்டுள்ள நிலையில் உத்தியோக பூர்வமாக கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிடமும் கையளிக்கப்பட்டது.

பேரவையின் குழுவினர் கனடா நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஷெலிவைட்டிங் மற்றும் பிரான்ஸ் தூதுவராலய அரசியல் விவகாரங்களுக்கான பொறுப்பாளர் வலன்டீன்வுல்ஃப்ரமிடமும் நேரடியாகக் கையளித்து அவர்களுடனான சந்திப்பின் போது தமிழ் மக்களிற்கான கௌரவமான நிரந்தரத் தீர்வின் அவசியத்தையும், பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச விசாரணை

23ஆம் பக்கம் பார்க்க....

# 18 கைதிகளுக்கு மறியல் நீடிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் 18 பேருக்கான விளக்கமறியல் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த அரசியல் கைதிகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று புதன்கிழமை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சில அரசியல்

24ஆம் பக்கம் பார்க்க....

# பாராளுமன்றத்தின் கௌரவத்தை எம்.பிக்கள் பாதுகாக்க வேண்டும்

## ஒழுக்கம் குறித்து ஜனாதிபதி அறிவுரை



(கொழும்பு)

மேன்மைப்பொருந்திய பாராளுமன்றத்தின் கௌரவத்தையும் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டியது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல

24ஆம் பக்கம் பார்க்க....

## ருவானுக்கு எதிராக விசாரணை உத்தரவு

பொலிஸாரின் முன்னாள் பேச்சாளர் ருவான் குணசேகரவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க புதிய பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு பணித்துள்ளார்.

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட வெடி பொருட்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இந்தியாவுக்கு தப்

24ஆம் பக்கம் பார்க்க....

# அதிபர்களின் கோரிக்கைக்கு அமைய பாடசாலை நேரத்தை மட்டுப்படுத்துக

## வடக்கு கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் வெப்ப காலநிலையால் வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளை அதிபர்களின் கோரிக்கைக்கு அமைவாக 12 மணிவரை மட்டுப்படுத்தி நடத்த அனுமதி வழங்குமாறு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் அசௌகரியமான சூடான காலநிலை

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையின் சுகாதாரதுறைக்கு பங்களாதேஷ் அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு பங்களாதேஷ் சுகாதார அமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பங்களாதேஷின் சுகாதார அமைச்சர் மொஹமட் நஸீம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போதே இலங்கையின் சுகாதாரதுறை முன்னேற்றத்துக்கான பாராட்டினை அவர் தெரிவித்துள்ளார்.



இந்த சந்திப்பில் பங்களாதேஷின் சுகாதார அமைச்சர், சுகாதாரத்துறை பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் கலந்துக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மகிபாலவும் கலந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை எமது அரசே பாதுகாக்கிறது

## பிரதி ஊடக அமைச்சர் கருத்து

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவை பாதுகாப்பது எமது அரசு என பிரதி ஊடக அமைச்சர் கரு பரணவிதாரன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர்களால் மகிந்தவின் பாதுகாப்பு தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் மின் கதிரைக்கு செல்ல நேரிடும் என மகிந்த அஞ்சியதாக அவர் தெரிவித்தார். அவரை அதிலிருந்து பாதுகாத்தது நாம் தான் என பிரதி ஊடக அமைச்சர் கூறினார்.

இதேவேளை, தகவல் அறியும் சட்டமூலம தொடர்பாக நீதிமன்ற தீர்ப்பு சபாநாயகரிடம் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதல் காரணமாக அது குறித்து கலந்துரையாட முடியவில்லை என அவர் கவலை வெளியிட்டார்.

மேலும், நிறைவேற்றப்படவுள்ள இந்த தகவல் அறியும் சட்டமூலத்தில் சில சொற் பிரயோகங்களில் மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்ற வேண்டும் எனவும் பிரதி ஊடக அமைச்சர் கூறினார்.

சட்டமூலம் குறித்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் தமக்கு மகிழ்ச்சி எனவும், தற்போது கிடைக்கப்பட்டுள்ள தீர்ப்பும தமக்கு சாதகமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் வாரத்தில் தகவல் அறியும் சட்டமூலம் குறித்து இரண்டாம் நிலை வாசிப்பு இடம்பெறும் என அவர் கூறினார்.

இதனையடுத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்த தகவல் அறியும் சட்டமூலத்தை பாராளுமன்றில் நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவோம் என பிரதி ஊடக அமைச்சர் கரு பரணவிதாரன நம்பிக்கை வெளியிட்டார். (செ-12)

# போலியான வியாபார முறைகள்; சட்ட நடவடிக்கை தேவை

## சுனில் எம்.பி நாடாளுமன்றில் உரை

சாதாரண மக்களை இலக்கு வைக்கும் போலியான வியாபார முறைகள் முன்னெடுக்கப்படுவதற்கு சட்ட ரீதியில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

,பெருமளவு பணத்தினை முதலீடு செய்யக்கூறி அவருக்கு முதலில் சூரிய சக்தியில் இயங்கக் கூடிய மின் கலமும், மின்குமிழும் வழங்கப்படும். அதைக் கொண்டு குறித்த முதலீடுகளுக்கு மேலும் பலர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அவ்வாறு இணைத்துக்கொள்ளும் போது அவர்கள் மூலம் கிடைக்கப்பெறும் வட்டிப் பணம் மோசம் செய்யப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்வாறே இன்றும் இது போன்ற மோசடியான வர்த்தக செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும், இதனைத் தடுக்கும் விதமான சட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவில்லையென ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார். (செ-12)

# 7 டைனமேட் வெடிகள் யாழ். குருநகரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் இறங்குதுறை முகப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட டைனமேட் வெடிகளை நீதிமன்ற உத்தரவிற்கமைய செயலிழக்க செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடிக்க வைக்கக் கூடிய நிலையில் ஏழு டைனமேட் வெடிகள் நேற்று புதன்கிழமை கடற்படையினரால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இறங்குதுறை பகுதியில் மீன்பிடி படகு ஒன்றின் கீழ், பொலித்தீனால் சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் குறித்த 7 டைனமேட் வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

பண்ணைக் கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இறங்குதுறை பகுதியில் மீன்பிடி படகு ஒன்றின் கீழ், பொலித்தீனால் சுற்றிக்கட்டப்பட்ட நிலையில் குறித்த 7 டைனமேட் வெடிகளும் மீட்கப்பட்டிருந்தன.

குறித்த டைனமேட் வெடிகள் மீட்பு தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## வித்தியா படுகொலை வழக்கு

# சந்தேக நபர்கள் பெறும் உரிமையை சட்டத்தரணிகள் வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சந்தேக நபர்கள் பெற்றுக்கொள்ளும் உரிமையை வழங்குவதற்கு சட்டத்தரணிகள் முன்வரல் வேண்டும். சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு வழங்கப்படும் உரிமையை யாரும் வழங்கலாம். இது தொடர்பில் சட்டத்தரணிகள் சிந்தித்து பாருங்கள் என ஊர்காவற்றுறை நீதவான் சட்டத்தரணிகளுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது 18) கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த கொலை வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இது தொடர்பில் பத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, தனியான ஒரு வழக்காகவும், மேலும் இருவர் சாட்சியங்கள் என கைது செய்யப்பட்டு இந்த வழக்கு வேறு ஒரு தினத்திலும் நடைபெற்று வருகின்றது. நேற்றைய தினம் குறித்த சாட்சியங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதவான் எம்.எல் ரியால் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது சாட்சியங்களான உதயசூரியன் சுரேஸ்குமார், தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். இவர்களை பார்த்த நீதவான் ஏன் சட்டத்தரணிகள் ஒருவரையும் நீங்கள் வைக்கவில்லை என கேட்டுள்ளார். தமக்கு வாதாடுவதற்கு சட்டத்தரணிகள் எவரும் முன்வருகின்றனர் இல்லை. அதனால்தான் எம்மால் சட்டத்தரணிகளை முன்வைக்கவில்லை என கூறினார்கள்.

இதன்போது மன்றில் அமர்ந்திருந்த சட்டத்தரணிகள் சிலரை நோக்கி, சட்டத்தின் பிரகாரம் சந்தேக நபர்களுக்கு அந்த உரிமையை வழங்கலாம் சிந்தித்து பாருங்கள் என அறிவுரை கூறினார். மேலும் அடுத்த தவணையில் மரபணு பரிசோதனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் நீதவான் கூறினார்.

இதன் போது மரபணு பரிசோதனைகளுக்கான கட்டணம் இதுவரை செலுத்தப்படவில்லை எனவும் சி.ஐ.டி.யினர் மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதவான் கூறினார். சாட்சியங்களை எதிர்வரும் பதினெட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், குறித்த காலப்பகுதிக்கிடையில், சட்டத்தரணிகளை மூலம் விண்ணப்பம் ஏதும் செய்ய முடியுமென்றால் செய்ய முடியும் எனவும் சந்தேக நபர்களிடம் கூறினார்.

இந்நிலையில் இம்மாதம் பதினெட்டாம் திகதி மீண்டும் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (செ-4)

# சமஷ்டி ஆட்சி; யோசனை நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக வடக்குக் கிழக்கை இணைத்து சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்க வேண்டும் என்று கோரி வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேல்மாகாண சபை நிராகரித்துள்ளது.

வடமாகாண சபையின் கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் மேல்மாகாண சபையில் ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் நிசாந்த சிறிவர்ணசிங்க நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரேரணையை முன்வைத்தார்.

இதன்போது வடமாகாண சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாடு மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று நிசாந்த சிறி வர்ணசிங்க கூறினார்.

அத்துடன், வடமாகாண சபையின் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்க மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களும் கருத்துக்களை வெளியிட்டனர்.

இதையடுத்து, வட மாகாண சபையின் தீர்மானத்தை நிராகரிக்கும் பிரேரணை மேலமாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (செ-12)

## தாக்கப்பட்ட

# சமரசிங்க எம்.பி வீடு திரும்பினார்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்க நேற்று மாலை வைத்தியசாலையில் இருந்து வெளியேறி வீடு திரும்பியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் ஆளும் கட்சியினருக்கும் மகிந்த ஆதரவணியினருக்கும் இடையிலேயே இடம்பெற்ற மோதலின் போது சந்தித் சமரசிங்க தாக்குதல்களுக்கு இலக்காகி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

முகம் மற்றும் தலைப்பகுதியில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தித் சமரசிங்க நேற்று வீடு திரும்பியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-12)

# நாட்டைவிட்டு சென்றவர்கள் பயமின்றி மீளத்திரும்பலாம்

## பிரதமர் ரணில் உத்தரவாதம்


(கொழும்பு)

**நாட்டை விட்டு சென்றவர்கள் அனைவரும் மீண்டும் இங்கு வந்து வாழும் சூழல் அமைத்துக் கொடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தவின் உரைக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ் நாட்டில் அகதிகளாக உள்ளவர்களின் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை சென்னையிலுள்ள இலங்கை தூதுவராலயம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இந்தியாவில் அகதிகளாக இருக்கும் குழந்தைகள் பிறப்புச் சான்றிதழ் பத்திரமின்றி இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தெரிவித்தார்.



இவர்கள் பற்றிய தகவல்களை தெரிவித்தால் அவர்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்த நேரத்தில் நாட்டை விட்டு சென்றவர்கள் மற்றும் அகதிகளாக நாட்டைவிட்டு சென்றவர்கள் பயமின்றி இலங்கைக்கு வரலாம் என்றும் தெரிவித்த பிரதமர் அகதிகளாக சென்றுள்ளோர் மீண்டும் நாட்டுக்கு திரும்புவதன் பொருட்டு அவர்களுக்கு தேவையான கடவுச்சீட்டு உள்ளிட்டவற்றை சட்டரீதியாக வழங்குவதற்கான நடவடிக்கையை இலங்கையின் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் இதன்போது பிரதமர் தெரிவித்தார். (இ-5)

## கடத்தப்பட்ட மாணவி மீட்பு சாரதி கைது

(கொழும்பு)

15 வயது பாடசாலை மாணவியை ஆட்டோவில் கடத்திச் சென்ற நபரை, ஹற்றன் பொலிஸார் மடக்கி பிடித்துள்ளதுடன் மாணவியையும் மீட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவை மோரா தோட்டத்தைச் சேர்ந்த மேற்படி சிறுமி, வீட்டுக்கு வெளியேயுள்ள மலசலகூடத்துக்கு செல்வதாக கூறி சென்றுள்ளார். அவர் நீண்ட நேரமாகியும் வீட்டுக்கு வராததால் உறவினர்கள் அவரை தேடுவதற்கு ஆரம்பித்துள்ளனர். இதன்போது, சிறுமி கொண்டுச்சென்ற டோச் நிலத்தில் கிடந்துள்ளது.

இதனைக் கண்ட உறவினர்கள் அது தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸில் உடனடியாக முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், ஹற்றன், மஸ்கெலிய பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் வழங்கியதுடன் தேடுதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில் டிக்கோயா நகரில் கடமையிலிருந்த ஹற்றன் பொலிஸார், வீதியில் சந்தேகத்துக்கிடமாக பயணித்த ஆட்டோவை சோதனையிட்டபோது, அதில் குறித்த சிறுமி இருந்ததாகவும் அவரை பாதுகாப்பாக மீட்டதுடன் ஆட்டோச் சாரதியையும் கைதுசெய்து பொகவந்தலாவை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## மருந்து வகைகளை தயாரிக்க தீர்மானம்

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இந்த வருடம் தொடக்கம் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் புதிதாக 19 மருந்துகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை மருந்து உற்பத்தித் திறனை அதிகரிப்பது தொடர்பில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் சயுரு சமரசுந்தர தெரிவித்துள்ளார்.

அததுடன் இரத்மலானையில் அமைந்துள்ளதைப் போன்று வத்தளை மற்றும் கண்டி பிரதேசங்களிலும் மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகப்பிரிவை பசிலிடம் ஒப்படைத்த மகிந்த

(கொழும்பு)

விமல் வீரவன்ச மற்றும் உதயகம்மன்பிலவின் கீழ் செயற்பட்ட கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகப் பிரிவு உடன் அமுலுக்கு வரும் வகையில் பசில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் உத்தரவிற்கமைய இது இடம்பெற்றுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் உள் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய கூட்டு எதிர்க்கட்சியிற்காக ஊடகங்களுக்கு செவ்வி வழங்குதல், மின்னஞ்சல், அச்சிடல், இணையத்தள மற்றும் சமூக ஊடகங்கள் அனைத்தின் செயற்பாடுகள் மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் அனைத்தும் பசில் ராஜபக்ஷவின் கீழ் நடைபெறவுள்ளது.

அத்துடன் ஊடக பிரிவிற்காக நாமல் ராஜபக்ஷ மற்றும் பசில்ராஜபக்ஷவின் நண்பர்கள் சிலர் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பிலவுக்கு நெருங்கிய நான்கு பேர் மாத்திரமே செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஊடக பிரிவில் நூற்றுக்கு 90 வீதமான அதிகாரம் ராஜபக்ஷர்களிடமே உள்ளது.

அத்துடன் இதுவரையில் கூட்டு எதிர்க்கட்சிக்காக செயற்படுகின்ற விமல் வீரவன்சவின் இணையத்தளத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷவுக்கும், கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் தனக்கு அவசியமான முழுமையான பிரசாரத்தை வழங்குமாறு நாமலினால் விமல் வீரவன்சவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவின் திட்டம் மற்றும் முதலீடுகளுக்கமைய ஊடகபிரிவிற்காக வார இறுதி பத்திரிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது. எதிர்வரும் வாரம் "இரிதா என்ற பெயரில் இந்த பத்திரிகை சந்தைக்கு வரவுள்ளது.



மகிந்த ராஜபக்ஷவின் அப்போதைய ஊடக பிரிவில் செயற்பட்ட மொஹான் சமர நாயக்க மற்றும் இரும்பு மோசடி தொடர்பில் பிரபலமான சுதர்மன் ரந்தலியகொடவிடம் இந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த பத்திரிகைக்காக ராஜபக்சர்களின் கறுப்பு பணம் முதலீடு செய்யப்படுகின்ற நிலையில் அதனை வேறு நபரின் முதலீடு மற்றும் நிறுவனம் என காட்டுவதற்காக ராஜபக்சர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கமைய விமல், கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றோர் தப்பி கொள்வதற்காக கட்டியெழுப்பப்பட்ட கூட்டு எதிர்க்கட்சியின் அமைப்பாளர் பிரிவு, ஊடக பிரிவு ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகள் பசில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (இ-5)

## நாடாளுமன்ற முடக்கத்துக்கு மகிந்த ஆதரவாளர்களே காரணம்

### அமைச்சர் கயந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்களின் முரட்டுத்தனமான செயற்பாடுகள் காரணமாகவே நாடாளுமன்ற அமர்வு பிற்போடப்பட்டதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அதனை அவர்களால் பொறுத்துக் கொண்டிருக்கமுடிய வில்லை.

இதன் காரணமாகவே அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர் என்றார். (இ-5)

## அடுப்புக்கு மண்ணெண்ணெய் ஊற்றிய பெண்ணுக்குக் காயம்

எரிந்து கொண்டிருந்த அடுப்புக்கு மண்ணெண்ணெய் ஊற்றியபோது, உடலில் தீப்பற்றியதில் தீக்காயங்களுக்குள்ளாகிய பெண்ணொருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், அபூபக்கர் வீதியைச் சேர்ந்த பிரபாகரன் தயாபதி (வயது- 40) என்பவரே தீக்காயங்களுக்குள்ளானவராவார்.

எரிந்து கொண்டிருந்த அடுப்புக்கு மண்ணெண்ணெயை ஊற்றிய போது உடலில் தீ பற்றிக் கொண்டுள்ளது. தீக்காயங்களுக்குள்ளாகிய பெண் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## இலங்கையில் உதயமாகியது மற்றுமொரு தமிழ்க்கூட்டணி

(கொழும்பு)

தமிழ் மக்களின் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டு, ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி என்ற பெயரில் மற்றுமொரு புதிய கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, வீ.ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேஷனின் ஐக்கிய மக்கள் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என பத்து கட்சிகள் ஒன்றிணைந்து இந்த புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளன.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு, கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் ஏற்கனவே நடத்தப்பட்ட பல கட்ட பேச்சுவார்த்தை களைத் தொடர்ந்து எட்டப்பட்ட இணக்கத்திற்கமைய, இந்த புதிய கூட்டணி உருவாகியுள்ளது. (இ-5)


## ரூ.2 1/2 கோடி பெறுமதியான கொக்கேய்ன் மீட்பு

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கொக்கேய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நைஜீரியா நாட்டுப் பிரஜைகள் எட்டு பேரும் தங்கியிருந்த வீட்டுக்கு அருகிலான தோட்டத்திலிருந்து மேலும் 1,206 கிராம் கொக்கேய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த வீட்டு வளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே, அப்போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொருள், சுமார் இரண்டு கோடியே 41 இலட்சம் ரூபாய் பெறுமதியுடையது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# பஞ்சாப் அணியை பந்தாடியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்



ரசலின் அபாரமான பந்து வீச்சின் மூலம் பஞ்சாப் அணிக்கு எதிரான ஐபிஎல் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 7ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

9-வது ஐபிஎல் தொடரின் 32-வது லீக் போட்டி நேற்று கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.


இதில் முரளி விஜய் தலைமையிலான பஞ்சாப் அணியும் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணியும் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்தப்பா 70 ஓட்டத்தினையும், கம்பீர் 54 ஓட்டத்தினையும் பெற்றனர்.

165 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. துடுப்பாட்டத்தில் மக்ஸ்வெல் 68 ஓட்டங்களை எடுத்தார். (க)

# தாமதமாக பந்து வீசியதற்காக ஹோலிக்கு ரூ.24 லட்சம் அபராதம்



கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் தாமதமாக பந்துவீசிய காரணத்திற்காக ஹோலிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொல்கத்தா நைட் ரைடர்ஸ்- பெங்களூர் றொயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

இந்த போட்டியில் கொல்கத்தா அணிக்கு தாமதமாக பந்து வீசிய குற்றத்திற்காக அணித்தலைவர் என்ற முறையில் ஹோலிக்கு ரூ.24 லட்சமும், மற்ற வீரர்களுக்கு ரூ.6 லட்சமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக புனே அணிக்கு எதிரான போட்டியிலும் தாமதமாக பந்துவீசியதற்காக ஹோலிக்கு ரூ.12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலை மீண்டும் நீடித்தால் ஹோலி ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்படலாம். (க)

# மாட்ரிட் டென்னிஸ்

## கால் இறுதியில் சானியா

ஸ்பெயினில் நடந்து வரும் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியில் சானியா ஜோடி கால் இறுதியில் தகுதி பெற்றது.

மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. பெண்கள் இரட்டையர் 2-வது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி 6-0, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ஜங் சுயாங் (சீனத் தைபே)- தாரிஜா ஜுராக் (குரோஷியா) இணைய்ய விரட்டி கால்இறுதிக்கு முன்னேறியது. (க)

# ஜுலையில் சானியாவின் சுயசரிதை



இந்திய விளையாட்டு வீரர்களில் மிகவும் பிரபலமானவர் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா(வயது-29).

தற்போது சானியா மிர்சா எழுதியுள்ள அவரின் சுயசரிதை புத்தகம் எதிர்வரும் யூலை மாதம் வெளியிட ஹார்பர் கொலின்ஸ பதிப்பகம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த சுயசரிதைக்கு ACE AGAINST ODDS என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயப் மாலிக்கை திருமணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சானியா குறித்த சுயசரிதையில், தான் எவ்வாறு உலகின் நம்பர் ஒன் டென்னிஸ் வீரராக முன்னேறினார் என்பது குறித்தும், தனது டென்னிஸ் வாழ்க்கையில் சந்தித்த அனுபவங்கள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் நடந்த சுவாரஸ்யமான சம்பவங்கள் குறித்தும் பதிவு செய்துள்ளார்.

இதுபற்றி ஹார்பர் கொலின்ஸ் பதிப்பகத்தின் தலைமை ஆசிரியரான கார்த்திகா கூறுகையில்,

சானியாவின் சாதனை உண்மையில் மிகப் பெரிய சாதனையாகும். இந்த சுயசரிதை மிகவும் தூண்டுதலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த புத்தகத்தை வெளியிடுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என கூறியுள்ளார். (க)

# ஐ.பி.எல் பஞ்சாப் அணியில் அம்லா முதல் முறையாக இணைவு



ஐபிஎல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் அவுஸ்திரேலியாவின் ஷான் மார்ஷ இடம்பெற்றிருந்தார்.

இவர் தற்போது கடுமையான முதுகுவலியின் காரணமாக எஞ்சிய போட்டிகளிலிருந்து விலகியுள்ளார்.

எனவே இவருக்கு பதிலாக தென்னாபிரிக்காவை சேர்ந்த ஹஷீம் அம்லா சேர்க்கப்படலாம் என தெரிகிறது.

ஏலத்தின் போது ஒரு கோடிக்கு ரூபாய்க்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த அம்லா ஏலம் போகவில்லை, அதுமட்டுமின்றி இவர் ஐ.பி.எல் போட்டியில் விளையாடியதில்லை.

நல்ல பார்மில் இருக்கும் அம்லா கடைசியாக நடந்த உலகக் கிண்ண இருபது-20 போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதுவரையிலும் 7 போட்டிகளில் விளையாடியுள்ள பஞ்சாப் அணி, 2போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.(க)

# சர்வதேச கார் பந்தயத்தில் சென்னை வீரர் அர்மான்




சென்னையை சேர்ந்த கார் பந்தய வீரரான அர்மான் இப்ராஹிம்(வயது-26), இம்மாதம் இரண்டு சர்வதேச கார் பந்தயங்களில் பங்கேற்று விளையாடவுள்ளார்.

அர்மான் இப்ராஹிம், முன்னாள் இந்திய F3 கார் பந்தய சாம்பியனான அக்பர் இப்ராஹிமின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

கொரியாவில் எதிர்வரும் மே 13-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை நடக்கும் GT Asia Championship கார் பந்தய தொடரில் முதல் முறையாக இப்ராஹிம் பங்கேற்று விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதை தொடர்ந்து, சீனாவில் மே 20-ம் திகதி முதல் 22-ம் திகதி வரை நடக்கும் தொடரில், இரண்டாவது முறையாக பங்கேற்று விளையாடவுள்ளார்.

ஜே.கே. டயர் ஆதரவோடு, மீண்டும் இலங்கை வீரர் மலகமுவவுடன்அணி சேர் ந்து இப்ராஹிம் விளையாடவுள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த தொடரில், இப்ராஹிம்-மலகமுவ அணி இரண்டாவது இடத்தை பிடித்தது.

இதுகுறித்து இப்ராஹிம் கூறுகையில், எதிர்வரும் நாட்கள் நிச்சயமாக எனக்கு ஒரு அற்புதமான நாட்களாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்த நாள் வரைக்கும் எனக்கு பின்னால் நின்று ஆதரவு அளித்து வரும் ஜே.கே.டயருக்கு நன்றி, வரும் தொடர்களின் முடிவு எனக்கு சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்புகளுடன் இருக்கிறேன்.

கடந்த ஆண்டு இரண்டாவது இடம் பிடித்தோம், கண்டிப்பாக இந்த முறை முதலிடத்தை பிடிப்போம் என இப்ராஹிம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க)

# வட மாகாண வல்லவன் உதைபந்தாட்ட சமர்

## இன்று ஆரம்பம்



பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் - 2016 உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் இன்று வியாழக்கிழமை கோலகலமாக ஆரம்பமாகவுள்ளது

கடந்த ஆண்டு 47 அணிகள் மோதிய இத் தொடரில் யாழ்.சென் மேரிஸ் வடமாகாண வல்லவனாக முடிசூடியிருந்தது.

முதல்தடவையாக இவ்வருடம் வட மாகாணத்தில் 74 அணிகள் மோதவுள்ளன.

இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் முதல் போட்டியில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும்,

மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையா ட்டு கழகமும் மோதவுள்ளன. (க)

# அவுஸ்திரேலியா முதலிடம்

CRICKET AUSTRALIA

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரிசையில் அவுஸ்திரேலியா அணி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் சங்கம் ஒருநாள் போட்டித் தொடருக்கான ஆண்டு நிறைவு தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் 34 போட்டிகளில் விளையாடியுள்ள அவுஸ்திரேலியா அணி, 124 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்திலேயே உள்ளது.

அதற்கு அடுத்தபடியாக, 41 போட்டிகளில் விளையாடியுள்ள நியூசிலாந்து அணி 113 புள்ளிகளுடன் இரண்டாவது இடம் பிடித்துள்ளது. தென்னாபிரிக்கா அணி 112 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.(க)

# இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல்,இசை,நாடக அரங்கு-2016

**நேரம்- 4.30**
**05.05.2016 இரண்டாம் நாள் வியாழன்**

தலைவர்
திரு.அ.பௌநந்தி
(விரிவுரையாளர்–கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

பிரதம விருந்தினர்
கௌரவ திரு.த.குருகுலராசா
(அமைச்சர்,கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,இளைஞர் விவகாரம்–வடக்கு மாகாணம்)

❖ நாச்சிமார் கோவிலடி பிரபா குழுவினர் வழங்கும்
மங்கல இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு.சி.பிரபாகரன் | திரு.ப.முரளி |
| திரு.ம.கபில்ராஜ் | திரு.ச.ஹரி |

❖ மங்கல விளக்கேற்றல்
❖ திருமுறை:செல்வி அ.ஆரபி,செல்வி ரா.தாரணி
செல்வி ஸ்.தேவந்தி,செல்வி மி.டிலக்சனா
❖ ஆசியுரை:மௌலவி அப்துல் அசீஸ்(காசிமி)
(தலைவர் அகில இலங்கை ஜம்பியதுல் உலமா
யாழ்.கிளிநொச்சி மாவட்டம்)
❖ வாழ்த்துரை:திரு.ந.விஜயசுந்தரம்
(அதிபர்,யா/பரமேஸ்வரா வித்தியாலயம்,திருநெல்வேலி,
பிரதம ஆசிரியர்–வலம்புரி)
❖ தலைமையுரை

தலைவர்
சைவவித்தியா விருத்திச்சங்க ''சைவச் சிறுவர் இல்ல''
மாணவர்கள் வழங்கும்
காவடிநடனம்
இசைக்கச்சேரி
பாட்டு: திரு.க.வர்ஜிகன் வயலின்: பிறிசில்டா ஜோஜ்
மிருதங்கம்:நா.வசந்
❖ நீர்வையூர் பொன்சக்தி கலாகேந்திரா மாணவிகள் வழங்கும்
நிருத்தியாஞ்சலி
நட்டுவாங்கம்:திருமதி சத்தியப்பிரியா கஜேந்திரன்
பாட்டு: திரு.க.வர்ஜிகன்
வயலின்:செல்வி பிறிசில்டா ஜோஜ்
மிருதங்கம்:திரு.ந.நந்தகுமார்
❖ வில்லிசை
கலைக்குழுவினர் வழங்கும்
**'புனிதம் மறந்த மனிதம்'**
❖ சுழலும் சொற்போர்
நடுவர்
செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்

**இன்றைய எமது மக்களின் பொருளாதாரத் தன்னிறைவிற்குப் பெரிதும் அவசியமானது**
திட்டமிடல் அல்ல கடின உழைப்பே!–திரு.இ.சர்வேஸ்வரா
கடின உழைப்பல்ல சேமிப்பே!–திரு.ந.ஐங்கரன்
சேமிப்பு அல்ல போதுமென்ற மனமே!–திரு.லே.சிவராஜா
போதுமென்ற மனம் அல்ல வாய்ப்புக்களே!– திரு . உ . ஹர்சன்
வாய்ப்புகள் அல்ல திட்டமிடலே!–திரு.சி.சசீவன்
❖ கலைஞர்கள் கௌரவிப்பு
❖ பிரதம விருந்தினர் உரை
❖ இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் வழங்கும்
திரு.செல்வரட்ணம்,திரு.பரமேஸ்வரன்,திரு. கே.தவநேசன்
திரு.கே.சிவகுமார்,திரு.ப.சியாமகிருஸ்ணன் ஆகியோரின்
பங்களிப்புடன் பண்டார வன்னியன்(வரலாற்று நாடகம்)
❖ நன்றியுரை

அனுசரணை
விவேகானந்தா அச்சகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(C-4517)

# ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு

மானிட சமூகத்தின் இருப் புக்கும் ஒரு சிறந்த மக்கள் சமூகத்தை கட்டியெழுப்பு வதற்குமான தமது பொறுப் புக்களை நிறைவேற்றுவதற்கு ஊடக நிறுவனங்க ளின் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன்செயற்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

விமர்சனங்கள், குற்றச் சாட்டுக்கள், குறைபாடுகளை சுட்டிக்காட்டுதல் மற்றும் நாட்டின் முன்னேற்றப் பயணத்திற்காக உண்மையை முடியுமான அளவு மக்களிடம் கொண்டு சென்று மக்களுக்கு சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பது ஊடக நிறுவனங்களினதும், ஊடகங்களினதும் பொறுப்பாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.


இலங்கையில் ஒரு சிற ந்த ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதற்காக பல்க லைக்கழக வெகுஜன தொடர் பாடல்துறை விரிவுரையாளர்கள் சங்கத்தினால் தயா ரிக்கப்பட்டுள்ள இந்த முன் மொழிவுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். பல்கலைக்கழக வெகுஜன தொடர் பாடல்துறை விரிவுரையாளர்சங்கத் தின் தலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாசவினால் இந்த முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் சுதந்திர ஊடகக்கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொள் ளும். ஊடக சுதந்திரத்தை மதிக்கும் ஒரு அரசாங்கம் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் நீண்டகால குரலாக இருந்து வரும் தகவல் அறியும் சட்டத்தை பாராளுமன்றத்தில் மிக அண்மையில் நிறைவேற்றவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரச சார்பற்ற சில ஊடக நிறுவனங்களின் அதிகா ரிகள் தங்களது அரசியல் மற்றும் கலாசார எண்ணங்களுக்கேற்ப மட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட ஜனா திபதி, நாட்டினுள் உறுதி செய்யப்பட்டிருக்கும் ஊடகச் சுதந்திரத்தை எவ்வளவு தூரம் ஊடக ஒழுக்கங்களைப் பேணி நாட்டுக்காகவும் மக்களுக் காகவும் பயன்படுத்துகிறோம் என்பது தொடர்பில் அவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண் டும் எனவும் குறிப்பிட்டார்.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் நிமல் போப்பகே, தகவல் திணைக்க ளத்தின் பணிப்பாளர் நாய கம் கலாநிதி தர்ஷனி குணதிலக்க, களணி பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேரா சிரியர் சுனந்த மத்தும பண்டார, ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் சம்பத் அமரதுங்க, ஶ்ரீபாலி பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ரஞ்சன் ஹெட்டியாராச்சி, கொழும்பு பல்கலைக் கழகத்தின் கல்விப்பீட பீடாதிபதி பேரா சிரியர் வன்னிகமகே சந்திர தாச, பத்திரிகைப் பேர வையின் தலைவர் சட்டத்த ரணி கொக்கல பந்துல வெல்லால ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-12)

# ஆத்ம சாந்தி பிரார்த்தனை


சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்


சிவஸ்ரீ பா.சாந்தஸ்வரூபக் குருக்கள்

அன்புடையீர்!
கடந்த 23.04.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குல விளக்கு சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் (நா.பா) , சிவஸ்ரீ பா.சாந்தஸ்வரூபக் குருக்கள் (சாந்தன்) (பிரதம குரு யாழ்.வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம், யாழ்.சத்திரம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்,நம்பிக்கை பொறுப்பாளர், கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்,பரம்பரை குரு, காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், போசகர், கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை ஆலோசகர், ஸ்ரீ நாகேந்திர பீடம்) அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை எதிர்வரும் சித்திரை 23 ஆம் நாள் 06.05.2016 நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற இருப்பதால் அப்பிரார்த்தனையில் ஆலய பரிபாலன சபையினர், அடியார்கள், வர்த்தகப் பிரமுகர்கள் குருசுவாமிகள், சுவாமிமார்கள், கலைஞர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறும் குருக்கள் ஐயாவின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்டஅழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 1123
இங்ஙனம் குடும்பத்தினர்.
(சி-4496)

# இராசி பலன்

05.05.2016
(சித்திரை 22, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி காலை 6.23 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 3.58 மணிவரை
ரேவதி முற்பகல் 11.36 மணிவரை
சுபநேரம் 7.26-8.56 மணிவரை
இராகுகாலம் 1.26-2.56 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | சூரி சுக் புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் பகல் 11.35 இற்கு மேட-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** பணவரவு திருப்திதரும், விவாதங்களை குறைத்துக் கொள்வது நல்லது, இறைவழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு.

**இடபம்:** சயன சுகக் குறைவான நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்:** எதிர்பாராத வகையில் தனவரவுகள் வந்து சேரலாம், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தொட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**மகரம்:** பிறருக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோர்களின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பேச்சில் இனிமை ஏற்படும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** வெளியூர் பயணத்தால் ஆதாயமுண்டு, சுற்றத்தாரின் வருகையுண்டு, தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

# நாட்டின் சுகாதாரத்துறைக்கு ஆபத்து

## வட பிராந்திய மருத்துவர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மருத்துவ சங்கத்தில் அனுமதி பெறாத தனியார் மருத்துவக் கல்லூரியான மாலபே மருத்துவக் கல்லூரிக்கு எதிராக போராட்டம் நடத்திய மருத்துவபீட மாணவர்களை அரசு அடக்க முயல்வதனைக் வன்மமையாகக் கண்டிப்பதுடன் தரம்குறைந்த தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பது நாட்டின் சுகாதாரத் துறைக்கு ஆபத்தானது என இலங்கை மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் வட பிராந்திய மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.




வட மாகணத்திலுள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த இலங்கை மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மருத்துவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மாலபே தனியார் பல்கலைக் கழகத்தை மூடுமாறு கோரி அகிம்சை ரீதியாக 3 நாட்கள் மருத்துவ பீட மாணவர்கள் சத்தியாக்கிரக போராட்டத்தை மேற்கொண்ட போது இதனை எவரும் செவி சாய்க்காமல் அவர்களை உதாசீனப்படுத்தி எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் அவர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியிருந்தனர். இது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம்

இலங்கையில் இதுவரை அரச மருத்துவ பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. ஆயினும் 6 வருடங்களுக்கு முன்னர் மாலபே எனும் தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பிக்கப்படும் போது தனியார் மருத்துவக்கல்லூரி எனும் பெயரில் ஆரம்பிக்கப்படவில்லை. மாறாக முகாமைத்துவம் தொடர்பான கல்லூரியாகவே ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவக்கல்லூரிக்கு வழங்க வேண்டிய எந்த அதிகாரத்தையும் இலங்கை அரசு வழங்கவில்லை.

ஆனால் அவர்கள் பொய் கூறி ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களை சேர்த்துள்ளார்கள்.அத்துடன் ஒவ்வொரு மாணவரிடத்திலும் பெருந்தொகையான பணத்தை பெற்றுள்ளனர்.

இதேவேளை அரசு குறித்த தனியார் மருத்துவக்கல்லூரி அரச வைத்தியசாலைகளை பயன்படுத்த. முடியும் எனவும் பல மில்லியனுக்கு மேற்பட்ட கடன் உதவிகளையும் வழங்கியுள்ளது.

மருத்துவசபையின் அங்கீகாரம் இன்றி தரம் குறைந்த மருத்துவக்கல்வியை பயின்று வெளியேறும் வைத்தியர்களால் இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாரிய ஆபத்து ஏற்படவுள்ளது. எனவே நாம் தனியார் வைத்தி யசாலையை எதிர்க்கவில்லை. ஆனால் தரம் குறைந்த மருத் துவக்கல்லூரியை அரசு எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பதே எமது கேள்வி.

எனவே அரசு இதற்கு முற்று முழுதாக நடவடிக்கை எடுத்து குறித்த தனியார் வைத்தியசாலையை முற்றாக அரசாங்க மயப்படுத்த வேண்டும்

இதுவரை காலமும் மாவட்டத்தில் அதிகூடிய சித்திகளைப் பெற்று திறமை அடிப்படையில் வடிகட்டப்பட்டு மருத்துவத்துறை கற்பதற்கு தெரிவாகின்றனர். இதற்காக ஆகக்குறைந்தது A2B அல்லது 2AB பெற்றிருக்க வேண்டிய நிலைமையில், வெறுமனே 3 S களைப் பெற்ற ஒருவரால் பணமிருந்தால் மருத்துவம் கற்கும் நிலை தோன்றியுள்ளது.

இதன் காரணமாக தரமற்ற வைத்திய சமுதாயம், நம்பகத்தன்மை குறைந்த சுகாதாரத்துறை உருவாகும் ஆபத்துள்ளது. இலங்கை அல்லாத வேறுநாடுகளில் மருத்துவம் பயிலும் ஒருவர், இலங்கையில் தொழில் புரிய வேண்டுமாயின், அரச மருத்துவ சங்கத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். ஆனால் மாலபே தனியார் கல்லூரி மாணவர்கள் இவ்வாறான பரீட்சை எழுதாமலேயே நேரடியாக தொழில் புரிய முடியுமென்பதனால், இவர்களது திறமையின்மை மூடி மறைக்கப்பட்டு, நம்பகத்தன்மையற்ற வைத்தியம் மக்களை அடைய வழிகோலும். இவ்வாறாக, அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவ மாணவர்களின் வளங்களை சூறையாடி, திறமை குன்றிய, நம்பகத்தன்மையற்ற சுகாதாரத்தை வழங்கும் வைத்தியர்களை உருவாக்கும் பொறிமுறையை வழங்குவதற்கான நடவடிக்கையை நாம் எதிர்க்கிறோம் நேரடியாக அரச கட்டுப்பாட்டுக்குள் வந்தால் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்என அவாகள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

## ஆசிரிய மாணவர்களுக்கான அத்தியாவசியக் கூட்டம்

தேசிய கல்வி நிறுவகத்தின் நெல்லியடி கற்கை நிலையத்தில் கல்வி மாணிக் கற்கைநெறி (2013/2015) கல்வி ஆண்டில் இணைந்துள்ள ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்ததல் தொடர்பான அவசியமான கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யா/நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நெல்லியடிக் கற்கை நிலையத்தில் பதிவுகளைக் கொண்டுள்ள அனைத்து ஆசிரிய மாணவர்களையும் அக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## விருந்தோம்பல் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்.மாவட்டத் தில் உள்ள காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் விருந்தோம் பல் கற்கை நெறிகளான சமையலா ளர்,வெதுப்பாளர், அறை பராம ரிப்பாளர், உணவு மற்றும் குடிபா ணம் பரிமாறுபவர் என்பவற்றை எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்க வுள்ளது.

இக்கற்கைநெறிகளிற்கான பதிவுகள் எதிர்வரும் 10ஆம் திகதிவரை இல.12 கே.கே.எஸ்.வீதி வீரசிங்கம் மண்டபம்(1ம்மாடி) இல் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே இக்கற்கைநெறிகளினை கற்க விரும்புபவர்கள் தங்கள் சுய விபரக்கோவை மற்றும் கல்வி சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு இ.தொ.அ.உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ

## வாழ்வாதார உதவியாக கால்நடைகள் வழங்கல்



வடமாகாண விவசாய மற்றும் கால்நடை அமைச்சின் நிதியுதவியுடன், நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட, வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துமுகமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆடுகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் என்பன கையளிக்கும் நிகழ்வு அண்மையில் திருநெல்வேலி கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கால்நடைகளைப்பயனாளிகளிடம் வழங்கி வைத்தார். நான்கு குடும்பங்களுக்கான 08 ஆடுகளும், ஏனைய 37 குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன், கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்கள மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரிகள், பயனாளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (இ-89)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் இந்து புத்த கலாசார சங்கம் நடத்தும் தேசிய இரண்டாவது மொழி நிலையத்தில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந்து புத்த கலாசார சங்கத்தின் தலைவர் அதுரலியாரத்னா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)




யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 23 ஆவது வருடாந்த அமர்வுகள் நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகியுள்ளது. பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், விஞ்ஞான பீடம் என்பவற்றில் ஆரம்பமாகியுள்ள இவ் அமர்வுகள் தொடர்ந்தும் இன்றும் நாளையும் இடம்பெறும்.

## நாடாளுமன்றத் தாக்குதல்

# சீ.சீ.ரி.வி. ஆதாரத்தை கொண்டு நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

### மகிந்த சமரசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

**நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆளும் மற்றும் ஒன்றிணைந்த எதிரணியினருக்கிடையிலான கைகலப்பு தொடர்பில், ச்.சீ.ரி.வி. ஆதாரங்களை அடிப்படையாகக கொண்டு நடவடிக்கை எடுக்கப்படு மென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து தொடர்ந்து குறிப்பிட்ட அமைச்சர்,

"நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இச் சம்பவம் மிகவும் வருந்தத்தக்கது. அத்தோடு, இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். இது ஜனநாயகத்தை கடுமையாக பாதிக்கும் செயற்பாடாகும். எனவே இதுபோன்ற செயற்பாடுகள் இனிமேலும் இடம்பெறாதிருக்கும் வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேணடும்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவம் சீ.சீ.ரி.வி கமராக்களில் பதிவாகியுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு இதனோடு தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடாளுமன்றம் போன்ற உயரிய சபையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனபது தொடர்பிலான கோவை ஒன்று, மூன்று மாதங்களுக்கு முன்பு சகல நாடா ளுமன்ற பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டது. அதன் பின்னரும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. இதற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டம் நடைமுறையில் உள்ளது. அதனை செயற்படுத்தாமையே இவ்வாறான மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு காரணம்.

எமது நாட்டின் உயரிய சபையை நிந்தனை செயயும் வகையிலான செயற் பாட்டிற்கு உயர்நீதிமன்றம் வரையில் செல்வதற்கான சட்டத்திட்டங்கள்உள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்தி வெகு விரைவில் இந்தச் செய ற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்' என அவர் மேலும தெரிவித்தார். (இ-5)

## கேள்விக்கான கோருதல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வ ரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIBA), வீதி நிர்மாணிப்பதற்கு C-5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தினை கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை. இல. 04/2016 இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அலலது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தபட்டுள்ளது.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், 657/1A கடற்கரை வீதி, குருநகர் என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை கீழே தரப்பட்ட முகவரியில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து 05.05.2016 முதல் 25.05.2016 வரை 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா ஆயிரம் (ரூபா 1000.00) பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
657/1A கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

6. கேள்விகள் 26.05.2016 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்டச்செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

7. கேள்விகள் 07.07.2016 வரை செல்லுபடியாகும்.

8. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப்பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. ஒரு கேள்விதாரர் வீதி அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம் மேற்கொள்ளப்படும் வேலைகளின் அதிகப்படியாக மூன்று வேலைகளை மட்டும் பெறுவதற்கு உரித்துடையவர்.

10. ஒரு கேள்விதாரருக்கு கீழே தரப்பட்ட வேலைகளில் ஒன்று மட்டும் வழங்கப்படும்.

11. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
657/1 A, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 10.05.2016 அன்று 15:00 மணிக்கு நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணை விபரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | NP/RDD/JF/SP/2016/01 | எழுவைதீவு சப்பாத்துப்பாலம் (Causeway) புனரமைப்பு | 24.00 | C5 | 240,000.00 | 04.08.2016 | 120 days |
| 02 | NP/RDD/JF/SP/2016/02 | எழுவைதீவு வீதி புனரமைப்பு (0.000-1.770km) | 12.20 | C5 | 122,000.00 | 04.08.2016 | 120 days |
| 03 | NP/RDD/JF/SP/2016/03 | எழுவைதீவு வீதி புனரமைப்பு (1.770 - 3.300km) | 12.20 | C5 | 122,000.00 | 04.08.2016 | 120 days |

நா.வேதநாயகன்,
அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்.மாவட்டம்.

(சி-4514)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-08


(04.05.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | ... | 21) | 1 | 31) | 2 |
| 2) | 2 | 12) | 88வயது | 22) | 3 | 32) | 3 |
| 3) | 2 | 13) | 2 | 23) | 2 | 33) | 2 |
| 4) | 3 | 14) | 1 | 24) | 2 | 34) | 3 |
| 5) | 2 | 15) | ... | 25) | 2 | 35) | 3 |
| 6) | 2 | 16) | 2 | 26) | 1 | 36) | 2 |
| 7) | 1 | 17) | 3 | 27) | 3 | 37) | 2 |
| 8) | 2 | 18) | 1 | 28) | 2 | 38) | 2 |
| 9) | 1 | 19) | 1 | 29) | 1 | 39) | 2 |
| 10) | 1 | 20) | 2 | 30) | 2 | 40) | 2 |

11.முகம் © இற்கு எதிரே உள்ள முகம்



15.



◆ இலங்கை திறந்த பல்கலைக்கழக போட்டிப் பரீட்சை ஒன்றில் 40 வினாக்கள் உள்ளன. விதிமுறைகளின் படி சரியான வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படுகின்றது. பிழையான வினாக்களுக்கு ஒரு புள்ளிகள் வீதம் கழிக்கப்படுகின்றது. பஸ்மி பெற்ற புள்ளி 50 எனின்

21.சரியான விடைகள் எத்தனை

1.30


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா:7<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA, MBA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4349 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 33செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: சித்தவைத்தியர்<br>தொ.இ: G/5224 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 57செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: 10 தரம்/ தொழில்<br>தொ.இ: B/4353 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம் சுவாதி<br>கி.பா: 61செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:NCE<br>தொ.இ: G/5228 |
| பிறப்பு: 1981NON RC<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/Lகட்டார்<br>தொ.இ: B/4357 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 5சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில<br>தொ.இ: G/5231 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 64<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>தொ.இ: B/4363 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 72செவ் 8 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:Diploma<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5232 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- [illegible] 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]

# ரூ.2 இலட்சம் பெறுமதியான பாலை மரக்குற்றிகள் மீட்பு; வாகனத்தை கைவிட்டு கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்



முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஹன்ரர் வாகனத்தில் கடத்தப்பட தயாரான நிலையில் இருந்த 8 பாலை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இதன் போது வாகன சாரதி உட்பட வாகனத்தில் பயணித்தவர்கள் தப்பித்துச் சென்றுள்ளதாகவும் பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எட்டுப் பாலை மரக்குற்றிகளையும் இயக்கச்சிப் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை 4 மணியளவில் மடக்கிப் பிடித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, ஹன்ரர் வாகனம் ஒன்றில் பாலை மரக்குற்றிகள் கடத்தப் படுவதாக பளைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைக் கப்பெற்றது.

இதனையடுத்து, இயக்கச்சிப் பகுதியில் வீதித்தடையை ஏற்படுத்திய பொலிஸார், கடத்தல் வாகனத்தை மறித்த போது, வாகனம் நிறுத்தாமல் தொடர்ந்து சென்றுள்ளது. வாகனத்தை பொலிஸார் பின்தொடர்ந்து சென்ற நிலையில், எழுதுமட்டுவாள் பகுதியில் வாகனத்தை நிறுத்திவிட்டு கடத்தல்காரர்கள் தப்பித்துச் சென்றனர். மீட்கப்பட்ட பாலை மரக்குற்றிகள், சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியுடையது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

## நிர்வாகசபைத் தெரிவு

கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் மாவட்ட நிர்வாகசபைத் தெரிவு கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது தலைவராக அ.கனகரத்தினம், உப தலைவராக நா.சோதிநாதன், செயலாளராக நா.ஜெயராணி, உப செயலாளராக ஐ.குணரத்தினம், பொருளாளராக மு.சிவஞான சுந்தரமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். உறுப்பினர்களாக ஆறு பேரும் தெரிவாகினர். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், கரைச்சி பிரதேச செயலர், கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-254)

## கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக குறுகிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட தேர்தல் அலவலகத்தின் ஏற்பாட்டில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் எதிர்கால உபாய வழிமுறையான திட்டத்தை தயாரிக்கும்போது அதற்காக மக்கள் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக குறுகிய கலந்துரையாடலொன்று நாளை வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட புதிய செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல் நடவடிக்கை முறையை உரியவாறு பேணி வருவதற்காக தேர்தல் ஆணைக்குழுவிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நம்பிக்கையாகவும் தொடர்ந்தும் நிறைவேற்றுவதற்கு உபாய வழிமுறையான திட்டத்தை தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்காக தேர்தல் நடவடிக்கை முறை, அதன் கடமைப் பொறுப்புக்கள் என்பன தொடர்பில் கிராம அமைப்புக்களின் கருத்துக்கள், முன்மொழிவுகள் என்பன மிகவும் முக்கியமானதெனவும் ஆகவே அமைப்புகளின் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ச.பி. அமல்ராஜ் அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (2- 254-250)



உலக சைவத்திருச்சபையின் இலங்கைக்கான கிளை பஞ்ச ஈச்சரங்களுக்கான பாத யாத்திரை திருக்கேதீச்சரம் நோக்கி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது ஒரு சில பக்தர்கள், பாத யாத்திரைக்குழுவினர் ஆகியோர் கிளி/ஜெயபுரம் இந்து மகாவித்தியாலயத்திற்கு சென்று மாணவர்களுக்கு நல்லறிவூட்டல்களையும் வழங்கினர்.

## சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா செட்டிக்குளம் கங்காரங்குளம் பிரதேசத்தில் சிறுமியைக் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளான்.

கங்காரங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுச்சிறுமியே இவ்வாறு பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த, சிறுமி சில நாட்களாக அருகிலுள்ள காட்டுக்குள் பேய் பிடித்தது போல நடமாடித்திருந்ததாகவும் கடந்த மூன்று நாட்களாக வீட்டுக்கு வராமல் காட்டுக்குள்ளேயே இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காட்டுக்குள் சிறுமியைக் கண்டுபிடித்த பெற்றோர் சிறுமியை செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதன்போது சிறுமி 3 மாதக் கர்ப்பிணியாக உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட செட்டிகுளம் பொலிஸார், அதே இடத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞனைக் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் குறித்த இளைஞனை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (2-281)




## தமிழீழ வைப்பகத்தின் தங்கநகைகளை மீட்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிப்பு

(பனிக்கன்குளம்)

தமிழீழ வைப்பகத்தின் தங்க நகை மீட்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் நீதிமன்றத்தின் அனுமதியுடன் தங்க அகழ்வு நடவடிக்கையில் மீண்டும் ஈடுபட்டுள்ளனர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் இயங்கி வந்த தமிழீழ வைப்பகத்தின் தலைமைச் செயலகம், கேப்பாபிலவு வீதி, லூத்துமாதா சந்தியில் உள்ள இரண்டாம் காணியில் 2009 ஆம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தது.

குறித்த இடம் இராணுவக்கட்டுப்பட்டிற்குள் வரும் முன்னர் வைப்பகத்தின் தலைமைச் செயலகத்திற்கு முன்னால் இருந்த தனியார் ஒருவரின் வெற்றுக் காணியில் இருந்த ஆழமான மண் கிணற்றுக்குள் மக்கள் அடைவு வைத்த தங்க நகைகளை போட்டு கிணற்றை தூற்றியுள்ளனர்.

இந்நிலையில் தமிழீழ வைப்பகத்துடன் தொடர்புடைய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த தகவலை வழங்கியுள்ளார்.

இதனையடுத்தே முல்லைத்தீவு நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று பெக்கோ இயந்திரம் இல்லையென கடந்த 3 ஆம் திகதி இடம்பெறுமென அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் நேற்று முன்தினமும் எதுவும்கிடைக்கப் பெறவில்லை. கிணறு 65 அடி தாழும் என உரிமையாளர்களால் தெரிவிக்கப்படுகிறது .

ஆரம்ப நாளில் 23 அடியுடன் நிறுத்தப்பட்ட பணிகள் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதும் குறித்த ஆழம் வரை செல்லவில்லை. இந்நிலையில் நேற்றையதினமும் இந்த நடவடிக்கை தொடரந்தது. (2-281)

## சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் குளங்களின் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

### எச்சரிக்கிறார் கிளி.மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்

சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் வரட்சியான காலநிலையை கருத்திற்கொண்டு நீரை சிக்கனமாக பயன்படுத்தி வீண்விரயத்தைத் தவிர்க்குமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தொடரும் வரட்சி, சிறுபோக நெற்செய்கையில் தாக்கத்தினைச் செலுத்தாவிட்டாலும் கூட, குளங்களின் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தாவிட்டால் பயிர்ச் செய்கையின் இறுதிக்கட்டங்களில் நீர் நெருக்கடி ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

எனவே, நீரை சிறந்த முறையில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் சிறுபோகத்தில் பெரும் வெற்றியினை பெறமுடியும் என அவர் மேலும் கூறினார்.(2)

## அவுசதபிட்டிய கிராமத்தில் 25இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் காளான் உற்பத்தி நிலையம்



வவுனியா மாவட்ட, வவுனியா தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அவுசதப்பிட்டிய கிராமத்தில் வடக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் 2.5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காளரன் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து அதன் பயனாளிகளைச் சந்தித்து கலந்துரையாடினார் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன்.

இக்காளான் உற்பத்தித் திட்டத்தின் மூலமாக ஐந்து குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை நடத்துவதாகவும், இதேபோன்ற நிதி ஒதுக்கீட்டில் வவுனியா அக்போபுர என்னும் கிராமத்திலும் இவ்வாறான ஓர் வேலைத் திட்டம் இடம்பெறுவதாகவும் அதிலும் ஐந்து குடும்பங்களது வாழ்வாதாரம் நடைபெறுவதாகவும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கு அமைச்சரின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ்.மயூரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே. சி.பெலிசியன், வீதி அபிவிருத்தித் திணைக்கள மன்னார், வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் ரகுநாதன்,வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் எம்.எஸ்.ஜானக்க, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ரஜீப் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட 8பேர் வைத்தியசாலையில்

## பன்னங்கண்டியில் சம்பவம்

(பரந்தன்)

பன்னங்கண்டி கிராமத்திலுள்ள பொடி சிங்கம் வீதியில் தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் இவ் வீதியில் வசித்து வரும் நபர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிவடைந்ததில் 8 பணியாளர்கள் காயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த முதலாம் திகதி இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் கடந்த முதலாம் திகதி பிற்பகல் 5.30 மணியளவில் பொடி சிங்கம் வீதியில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு வந்தாறு மூலையைச் சேர்ந்தவர்களான மனோகரன் ரவிச்சந்திரன், சுபேந்திரன், சசிதரன், சுதாகரன், தங்கராசா , நல்லலிங்கம் ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் இயங்கிய தனியார் ஒப்பந்த நிறுவனமொன்றில் பணியாற்றும் 16 பணியாளர்கள் 2 ஆம் கட்டை பிள்ளையார் கோவில் வீதியில்(பொடி சிங்கம் வீதி உள்ள வீடொன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இவர்களுக்கான நீர் வரத்து நிறுத்தப்பட்டதை அடுத்து மேற்படி வீதியிலுள்ள ஒதுக்குப்புறமான கிணறு ஒன்றில் குளித்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த வீதியில் வசித்து வருகின்ற நபர் ஒருவர் அவ்விடத்திற்கு சென்று கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தவர்களை நோக்கி "இவ்விடத்தில் உள்ளாடையுடன் குளிக்க வேண்டாம்" என கூறியுள்ளார்.

இந்நிலையில் இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் மூண்டதில் பிரஸ்தாப நபர் பணியாளர்களைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அவர் கள் அனைவரும் அவ்விடத்திலிருந்து தப்பியோடி தாம் வசித்து வந்த வீட்டைச் சென்றடைந்தனர்.

இவர்களை பின் தொடர்ந்து சென்ற பிரஸ்தாப நபர் அவர்கள் வசித்து வந்த வீட்டினுள் நுழைந்த போது அங்கிருந்தவர்கள் அவரைத் தாக்கியதாக கூறப்படுகின்றது.

இதன்பின்னர் அவர் அவ்விடத்தில் இருந்துதப்பிச்சென்று அன்றைய தினம் மாலை 7.30 மணியளவில் தனது சகாக்களுடன் குறித்த வீட்டினுள் நுழைந்து கதவுகள், யன்னல்கள் என்பவற்றை அடித்து நொறுக்கியதுடன் பணியாளர்களையும் சரமாரியாகத் தாக்கியதாக கூறப்படுகின்றது. இதன்போது பணியாளர்கள் எட்டு பேர் காயம் அடைந்தனர்.

இவர்கள் அனைவரும் கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-9-312)

## சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெ.தரப்பு முன்னுக்குப்பின் முரணான தகவல் உச்ச நீதிமன்றம் கண்டனம்



சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா தரப்பு முன்னுக்கு பின் முரணான தகவல் கூறியதால் உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. சசிகலாவுக்கு சொந்தமான ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் சொத்து மதிப்பை மாற்றி கூறியதாகப் புகார் தெரிவித்துள்ளனர். கர்நாடக அரசு தரப்பு சட்டத்தரணி ஆச்சார்யா வாதத்தின் போது சசிகலா தரப்பு மீது குற்றம் சாட்டியுள்ளார்.

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் ரூ.66 இலட்சம் என சசிகலா தரப்பு தகவல் தெரிவித்துள்ளது. உச்சநீதி மன்றத்தில் ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் சொத்து மதிப்பை ரூ.13 இலட்சம் என குறைத்து காட்டியுள்ளனர். ஆச்சார்யா குற்றச்சாட்டை அடுத்து முரண்பட்ட தகவலை கூறியது ஏன் என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் 19 ஆவது நாளாக உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. கர்நாடக அரசு சட்டத்தரணி ஆச்சார்யா 2 ஆம் கட்ட வாதத்தை நேற்றுமுன்தினம் முதல் முன்வைத்து வருகிறார். உச்சநீதிமன்ற நீதிபதி பினாகி சந்திரகோஸ், அமிதவராய் அமர்வு முன் விசாரணை நடைபெறுகிறது. (இ-5)

## முதல் சுற்றுப் போட்டித் தொடரின் 3வது போட்டி பருத்தித்துறையில்

பண்டத்தரிப்பு, காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் நடத்தப்படுகின்ற ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டியின் முதல் சுற்று போட்டித் தொடரின் மூன்றாவது போட்டி பருத்தித்துறையில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை, மருதங்கேணி, வல்வெட்டித்துறை, கரவெட்டி, அச்சுவேலி, தொண்டைமானாறு, வறணி, சாவகச்சேரி, மீசாலை, மிருசுவில் ஆகிய பிரதேச ங்களில் வசிக்கும் மாணவர்களுக்கான முதற் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 07, 08ஆம் திகதிகளில் பருத்தித்துறையில் அமைந்துள்ள ஞானாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டிக்காக விண்ணப்பித்த மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து மாணவர்களினதும் முகவரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு வருகைதந்து போட்டியில் கலந்துகொள்ளுமாறு மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக தகவல்களுக்கு 0718473926, 077 002 7621 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். www.maru malarchy.org என்ற இணையத்தளத்திலும் அறிவிப்புக்களைப் பார்வையிட முடியும். (இ-5)

## மதிய உணவு வழங்கும் திட்டத்தால் அதிபர்கள் அவமானப்படுகின்றனர்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உலக உணவுத்திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு வழங்கலால் அதிபர்களும், ஆசிரியர்களும் பல அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இதனால் ஒருசிலர் அதிபர்களையும், ஆசிரியர்களையும் திருடர்கள் போல் பார்க்கும் நிலை தோன்றியுள்ளது. இத்தகைய நிலையைப் போக்க வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் உலக உணவுத்திட்ட அதிகாரிகளைச் சந்தித்த போது சுட்டிக்காட்டியுள்ளார்.

வறிய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மதிய உணவுத் திட்டம் மிகவும் பயனுள்ளது. இதனை இடைநிறுத்துவதற்கு பலரும் முயற்சி செய்கின்றனர். அதற்காக அதிபர்களையும், ஆசிரியர்களையும் திருடர்களாக விபரிக்கின்றனர். இத்தகைய செயற்பாடு அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகையான சுமையை ஏற்படுத்துகின்ற செயற்பாடு. இருப்பினும் எமது குழந்தைகளுக்காக வழங்கப்படுகின்ற சத்துணவை நாம் புறக்கணிக்க முடியாது என்பதற்காக இவர்கள் அர்ப்பணிப்புடன் அதனைச் செயற்படுத்தி வருகின்றனர். தமது பணத்தை எத்தனையோ அதிபர்கள் முற்பணமாகச் செலுத்தி மாணவர்களுக்கு சீரான மதிய உணவை வழங்கிவரும் நிலையில், அதிபர்களையும் ஆசிரியர்களையும் திருடர்கள் என சிலர் வர்ணனை செய்வது கவலையளிக்கின்றது.

இதற்கான மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைத்து இத்தகைய குற்றச்சாட்டுகளில் இருந்து அதிபர்களையும், ஆசிரியர்களையும் விடுவிக்குமாறு பொதுச் செயலாளர் உலக உணவுத்திட்ட அதிகாரிகளிடம் கேட்டுள்ளார். (இ-5)

## கருப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ.370 கோடி இழப்பீடு

### ஜான்சன்–ஜான்சனுக்கு உத்தரவு

அமெரிக்காவில் உள்ள மிசவ்ரி மாகாண நீதிமன்றத்தில் ரிஸ்டிசண்ட் என்ற பெண் வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், தான் குழந்தைகளுக்கான ஜான்சன் அண்ட் ஜான்சன் பேபி பவுடர் மற்றும் ஷவர் டூ ஷவர் பவுடரை பயன்படுத்தி வந்ததாகவும், அதனால் தனக்கு கருப்பை புற்றுநோய் ஏற்பட்டதாகவும் கூறியிருந்தார். இந்த நிறுவனம் தனது முகப் பவுடரில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயன பொருட்கள் இருப்பதாக நுகர்வோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த தவறிவிட்டது எனவும் குற்றம் சாட்டியிருந்தார். இந்த வழக்கு விசாரணை மூன்று வாரங்களாக நடந்து வந்தது. இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிமன்றம், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடாக 5.5 கோடி டொலர் (சுமார் 370 கோடி) வழங்க உத்தரவிட்டுள்ளது.

முகப்பவுடரில் புற்று நோய் ஏற்படுத்தும் இரசாயனம் இருப்பதாக நுகர்வோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவில்லை என ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் மீது அமெரிக்காவில் மிசவ்ரி மற்றும் நியூ ஜெர்சி நீதிமன்றங்களில் 1,200 வழக்குகள் நிலுவையில் உள்ளன. கடந்த பெப்ரவரி மாதம், ஜாக்குலின் பாக்ஸ் என்ற பெண் ஜான்சன் அண்ட் ஜான்சன் பவுடர் பயன்படுத்தியதால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக அவரது உறவினர்கள் தொடர்ந்த வழக்கை விசாரித்த இதே நீதிமன்றம் 7.2 கோடி டொலர் (சுமார் ரூ.482 கோடி) வழங்க உத்தரவிட்டது. (இ-5)

## மாலை நேர வகுப்புக்குச்சென்று திரும்பிய மாணவிகளுக்கு இளைஞர்களால் அச்சம் வீடுகளுக்குள் புகுந்து தஞ்சம்

வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் தனியார் கல்வி நிலையங்களில் மாலை நேர வகுப்புகளுக்கு வரும் மாணவிகள் வகுப்புகள் முடிவடைந்து வீடுகளுக்கு சென்ற சமயம் ஆட்டோவில் பாரிய ஒலியெழுப்பியவாறு பாடல்களை ஒலிக்கச்செய்து இளைஞர்குழுவொன்று மாணவிகளுடன் சேட்டையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது எவரும் உதவிக்கு செல்லாத காரணத்தால் மாணவிகள் செய்வதறியாது அயலில் உள்ள வீடுகளுக்குள் புகுந்துள்ளனர். இந் நிலையில் வீட்டு உரிமையாளர்கள் மாணவிகளின் பாதுகாப்பு கருதி அவர்களை வீடுகளுக்குள் பாதுகாப்பாக வைத்திருந்துவிட்டு இளைஞர்கள் சென்றவுடன் மீண்டும் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இந் நிலையில் வவுனியாவில் இடம்பெறும் பொலிஸ் சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்தில் பாதுகாப்பு குழு உறுப்பினர்களால் வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்கா பகுதியில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகமாக உள்ளதால் அப்பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றினை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்த போதிலும் ஆளணி பற்றாக்குறை காரணமாக பொலிஸாரை அப்பகுதியில் கடமையில் ஈடுபடுத்த முடியாது உள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

## ஞானச்சுடர் மலரின் 220 ஆவது இதழ் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் மலரின் 220 ஆவது இதழ் வெளிவந்துள்ளது. (இ-5)

## விசேட ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

பிரசாந்தி நிலைய உயர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டி.ஆர்.தீபக்ஆனந்தன் விசேட ஆன்மீக உரை நாளை மறுதினம் 7 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது. (இ-5)

## மற்றுமொரு குடும்ப ஆட்சிக்கான ஆரம்பம் அரசியலுக்குள் நுழையும் மைத்திரியின் மகள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா சிறிசேன அரசியலில் நுழைய ஆயத்தமாக இருப்பதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சத்துரிக்கா சிறிசேன கடந்த காலங்களில் பல்வேறு சமூக வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

அவ்வாறு பிரதம விருந்தினராக கலந்து கொண்டமையால் நேரடியாக அரசியலுக்கு நுழையும் சந்தர்ப்பங்களை கைவிட்டிருந்தார். எனினும் கடந்த மே தினத்திற்காக காலியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பேரணியில் சத்துரிக்கா கலந்து கொண்டிருந்தார். இதன் மூலம் அவரின் அரசியல் பிரசன்னம் உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எப்படியிருப்பினும் தான் அரசியலில் இணையவுள்ளதாக இதுவரையில் சத்துரிக்கா சிறிசேன அறிவிக்கவில்லை. (இ-5)

# நாட்டிற்கு எதிராக ஒருபோதும் நான் செயற்பட மாட்டேன்

## பௌத்த அமைப்புக்களிடம் சம்பந்தன் வாக்குறுதி

(கொழும்பு)

**நாட்டிற்கு எதிராக ஒருபோதும் நான் செயற்படப் போவதில்லை என்றும் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டுமெனவும் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**



நாட்டை பிளவுபடுத்த எதிர்க்கட்சி தலைவர் முனைவதாக குறிப்பிட்டு அண்மையில் எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்திற்கு முன்னால் சிங்கள பௌத்த அமைப்புக்கள் உள்ளிட்ட அமைப்புக்களைச் சேர்ந்த சிலர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே சம்பந்தன் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சித்தலைவரிடம் குறித்த உறுப்பினர்கள் மகஜரொன்றையும் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பேன்

## மீன்பிடி அமைச்சர் உறுதி



யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடி சம்மேளனப் பிரதிநிதிகள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகத்துடன் இணைந்து மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்தித்து தாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார்கள்.

இந்தச் சந்திப்பு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முன்னதாக டக்ளஸ் தேவானந்தாவை அவரது கொழும்பு அலுவலகத்தில் சந்தித்த சம்மேளனப் பிரதிநிதிகள், தொழில் ரீதியாக தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தடைகள், வடக்கு கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழையும் தென் இலங்கை மீனவர்களின் செயற்பாடுகள் மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், தாக்குதல்கள் தொடர்பாகவும், இறங்குதுறைகள் புனரமைப்பு, புதிய இறங்குதுறைகள் அமைப்பு, ஐஸ் தொழிற்சாலை அமையப் பெறுவதன் அவசியம், தொழில் உபகரணங்கள் வழங்கப்படுவதில் காணப்படும் முறைகேடுகள் மற்றும் மீன்பிடித் தொழில்சார்ந்த பல பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடினார்கள்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்தே மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காகவும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் மீன்பிடித் துறை அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமான அமைச்சர் மகிந்த அமரவீரவை சந்திப்பதற்கு டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடுகளை செய்தார்.

சம்மேளனப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக் குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அமைச்சர் மகிந்த அமரவீர முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் எடுப்பதாகவும் உடனடியாக தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் ஏனையவற்றுக்கு விரைவான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகவும் உறுதியளித்ததோடு, அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு உரிய தீர்வைக் காண்பதுடன் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த அக்கறை செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், அமைச்சர் மகிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர், அதிகாரி மற்றும் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர்களும் கலந்து கொண்டனர். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட வடமராட்சி கரையோரப் பகுதி அமைப்பாளர் பிரான்சிஸ் இரட்ணகுமார், கடற்றொழில் சார் பிரமுகர்கள் உட்பட சம்மேளனப் பிரதிநிதிகளுமாக, நா. வர்ணகுலசிங்கம், செ.அன்ரன் ஜெபராசா, யூ.சகாயராஜா, அ.அன்னராசா, செ. சிவஞானராசா, வே. தவச்செல்வம், அ.லூகிர்தினி, க.சூரியகுமார், வ.இ. அருள்தாஸ், எ.டின்குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

# விதியின் விளையாட்டினால் மகிந்தவிற்கு ஏற்பட்ட நிலை

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை விதியின் விளையாட்டு என உள்விவகார அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக கடமையாற்றி பயங்கரவாத தாக்குதல்களினால் ஒரு கண்ணை இழந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பாதுகாப்பை நீக்கிய மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பத்து ஆண்டுகளின் பின்னர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது ஓர் விதியின் விளையாட்டாகவே கருதப்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ஓய்வு பெற்ற ஜனாதிபதி ஒருவருக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து தீர்ப்பு ஒன்றை அளித்திருந்தார்.



பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உள்ளடங்கலாக ஏழு பேரே முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென சரத் என் சில்வா அறிவித்திருந்தார்.

2002 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் அந்த ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி, 168 ஆக இருந்த சந்திரிகாவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 7 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வரையறுக்கப்பட்டது.

இதன் ஓர் பிரதிபலிப்பாக இன்று மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என வஜிர அபே வர்தன தெரிவித்துள்ளார். (இ-5)

# ஆரம்ப வகுப்புகளில் விழுமியக் கல்வி



மு.விக்னேஸ்வரன்
(அதிபர்)
யா/உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்.

பிள்ளைகள் அடுத்துவரும் சமுதாயத்தின் சிற்பிகள். எதிர்காலத்தின் முத்துகள். எனவே இவர்களின் ஒழுக்க விழுமியங்களை உருவாக்கம் செய்வதிலும் தொடராக வலுப்படுத்துவதிலும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களினதும் சமய பாட ஆசிரியர்களினதும் அரவணைப்பும் அர்ப்பணிப்பும் மிகமிக வேண்டத்தக்கது. பெற்றோரின் அரவணைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் ஒத்துழைப்புக்கும் மேலாகப் பாடசாலை அதிபரின் தியாக மனப்பான்மை, பொறுப்புணர்வு, ஆக்கபூர்வமான புதிய சிந்தனை,அர்ப்பணிப்பு,செயல்ஊக்கம்,வழிகாட்டல் என்பன உச்ச நிலைகளிலிருப்பது உன்னதமானது. இதை நடைமுறைப்படுத்துவது உன்னதமானது. இதை நடைமுறைப்படுத்துவது வரவேற்கத்தக்கது.1-5 வயது வரை பெற்றோரின் அரவணைப்பில் சமூகச்சூழலில் தங்கியிருந்த பிள்ளையின் பயன்பாட்டை நெறிப்படுத்தி நடைமுறைக்கமைவாக வளர்த்தெடுக்கும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்தது. இதிலிருந்து இவர்கள் இம்மியளவும் விலகக்கூடாது. இதற்கு வகை கூறும் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த சில தசாப்தங்களுக்கு முன் கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் பேரன்,பேர்த்தியர் பெற்றோரைவிட ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துவதிலே தமது முழுப்பங்களிப்பையும் வழங்கினர். நாட்டார் பாடல்கள், நீதிக்கதைகள் என்பன இவர்களால் ஊட்டப்பட்டு குடும்ப சூழல் நல்ல நிலையை எட்டியது. பெற்றோர்களால் வழங்கப்பட்ட தண்டனைகளை இவர்கள் வெறுத்தனர். மாறாகஅன்பையும்அரவணைப்பையும் பாதுகாப்பையும் சிறுவர்களுக்கு வழங்கினர். சமய விழுமியங்களை தண்டனைகளுக்கு ஒப்பாக வழங்கினர். அவர்களும் மகிழ்ந்தனர். சிறார்களும் மகிழ்ந்தனர். வாழ்க்கைப் பயணமும் இலக்கை நோக்கிச் சரியான பாதையில் சென்றது. அந்நிலையில் பாடசாலைகளும் தத்தமது சீரிய பணியைத் தொடர்ந்தது என்பது வரலாறு. அந்நிலையில் மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தமாக காணப்பட்டது. சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டம்சங்கள், ஒழுக்க விழுமியங்கள் போன்றவை பாடசாலையூடாக அடுத்த தலைமுறையினருக்கு நகர்த்திச் செல்லப்பட்டன. பிள்ளையும் சமூகமும் ஆசிரியரின் வாக்கை தேவவாக்காக ஏற்றுக்கொண்டது. பாடசாலைகளில் தினசரி நடைபெறுகின்ற நற்சிந்தனை, விசேடமாக வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகின்ற கூட்டுப்பிரார்த்தனை,சமூக சொற்பொழிவுகள், குருபூசைத்தினம், ஆலயங்களில் உற்சவ காலங்களில் நடைபெறுகின்ற சமய சொற்பொழிவுகள், கதாபிரசங்கங்கள், வில்லிசைகள் ஆகியனவும் உரமூட்டின.

யதார்த்தத்தில் பாடசாலையின் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் தக்க வைப்பதிலும் பாடசாலை நிர்வாகம் பலத்த சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக மாணவர் ஒத்துழையாமை, பெற்றோர்கள் ஒத்துழையாமை,அரச சுற்றுநிருபங்கள், நீதிமன்ற கட்டளைகள்,சிறுவர் உரிமையில் விதந்துரைக்கப்பட்ட உண்மைகள்,அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தலையீடுகள் ஆகியன.

எனவே இவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு பாடசாலை நிர்வாகத்தைச்




சார்ந்ததாகவுள்ளது. அதிவேகமாக மாறிவரும் உலகில் மரபு ரீதியான, சம்பிரதாயபூர்வமான அணுகுமுறைகள் நலிவடைந்து வரும் நிலையில் ஒழுக்கத்தைக் கட்டிக்காத்த ஒழுக்கத்தின் காவல் நாயாகக் கருதப்பட்ட தண்டனைகளுக்கு சாவு மணியடிக்கப்பட்டு சட்டரீதியாக அது ஓரங்கட்டப்பட்டுள்ளது. எனவே ஊருடன் ஒத்தோடும் வகையில் சட்டத்திற்கு மதிப்பளித்து ஒழுக்கத்தை வலுவூட்ட பொருத்தமானதும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலையொன்று வேண்டற்பாலது.

ஆரம்பக்கல்வியின் போது ஒழுக்க விழுமியங்களைப் பேணி வந்த மாணவர் இடைநிலைக் கல்விக்கு வந்த பின்னரே கூடுதலானோர் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதில் பிறழ்வான நெறிமுறைக்கு உந்தப்படுவதையும் தள்ளப்படுவதையும் பாடசாலைகளில் அவதானிக்கப்படக்கூடியதாகவுள்ளது. இந்நிலையில் ஆரம்பத்தில் உள்ளக வன்முறையில் குழுவாகச் சேர்ந்து செயற்படுகின்ற தன்மை விரவிக் காணப்படுகிறது. சகபாடிக்குழுக்களின் பங்களிப்பே இந்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக பல தரப்பினராலும் நம்பப்படுகின்றது. இந்நிலையில் இவ்விடத்தில் இவர்களுக்குக் காத்திரமான நண்பர்களாக தொலைக்காட்சி நாடகங்கள், சினிமாப்படங்கள், நவீன வகைத் தொலைபேசிகள், அலைபேசிகள் என்பன அமைந்துள்ளன. இங்கு நடைபெறும் காட்சிகள் இவ்வாறான நடைமுறையைப் பின்பற்றும்போது வாழ்க்கை கருத்தை இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதை நிறுத்திட்டமாக இடித்துரைப்பதிலும் எடுத்துரைப்பதிலும் கல்விப்புலம் சார்ந்தோர் அக்கறை காட்டுவது புதிய ஒரு அணுமுறையாக அமையலாம்.

இதேவேளை இடைநிலை வகுப்பாசிரியர்களுக்கும் தமது மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய பாரிய கடப்பாடுண்டு. சில பாடசாலைகளைப் பொறுத்தவரையில் வேறு பாடசாலைகளிலிருந்து உள்வாங்கப்பட்ட




மாணவர்கள் வேறுபட்ட பிரதேசம் சார்ந்த சமய, சமூகம் சார்ந்த பிள்ளைகள் வரக்கூடும். அவர்கள் வாழும் சூழல் வேறுபட்டதாக அமையலாம். இந்நிலையில் மாணவர்கள் யாருடன் சேர்வதென்ற பிரச்சினைகள் உருவாகலாம். அதாவது தமது விழுமியத்திற்கேற்ப சகபாடிகளை ஏற்றுக்கொள்வதா? அல்லது நிராகரிப்பதா? என்பதாகும். இவற்றை இனங்கண்டு வழிகாட்டியாக நின்று தீர்வு காண்பதில் வகுப்பாசிரியர் வல்லவராக மாறிக்கொள்வது வரவேற்கத்தக்கது. பிள்ளைகளின் விழுமியச் சீராக்கம் மற்றும் உருவாக்கம், வலுவாக்கம், வலுப்படுத்தல் என்பதில் பெற்றோர்கள் விட்டுச் சென்ற இடத்தினைத் தொட்டுச் செல்வதில் ஆசிரியரே செல்வாக்கைச் செலுத்துகிறார். (கிட்டதட்ட 6-13 வயது வரை) இதில் பெரும்பகுதி ஆரம்பக் கல்வி ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது. பொதுவாகக் கூறின் விழுமியக்கல்வி சார் செயற்பாடுகளுக்கு சாதாரண வகுப்பறைப்போதனைகள் போதுமானவையல்ல. செயற்பாடுகள் ஊடாக அனுபவங்களைத் தொட்டுக் காட்டி, சுட்டிக்காட்டிப் போதனை முறையை வழங்கும் போது விழுமியத்தை உருவாக்கம் செய்வது, வலுவாக்கம் செய்வது பொருத்தமானதொன்றாக கருதப்படுகின்றது. பாடசாலைகளில் விழுமியத்தை பின்வரும் முறைகளில் உருவாக்கம் செய்யலாம்.

1. சுதந்திரமான அணுகுமுறை (Independence approach)

இது நேரடியாக பல்வேறு முறைகளில் கற்பித்தலைக் குறிக்கும்.

2. ஒருங்கிணைப்பு அணுகுமுறை

கலைத்திட்ட பாடங்களுடன் இணைத்து அவற்றினூடாக விழுமியங்களைக் கற்பித்தல் அணுகுமுறை (Suite approach) இது பாடசாலை முன்மாதிரியாகச் செயற்பட்டு அவ் விழுமியங்களை மாணவர்களை பின்பற்றச் செய்து கற்பித்தலை குறிக்கும்.

இம்முறை ஏற்கனவே பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன ஆயின் இரண்டாம் முறையை பின்பற்றி நடைமுறைப்படுத்த பாடசாலைகள் முன்வரவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இம்முறை சட்டத்திலிருந்தும் பாதுகாப்பை வழங்கக்கூடியதாகவும் சட்டத்துக்கப்பால் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் என்பது எதிர்பார்ப்பாகும். கூடுதலாக ஆரம்பக்கல்வி மாணவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டலையும் உந்துதல்களையும் வசப்படுத்தி நல் வார்த்தைகளான விழுமியங்களைப் பெற்றுள்ளனர். ஆனால் திட்டமிட்ட கற்றல் அனுபவங்களை வழங்குவதில் ஆசிரியர்கள் பின்நிற்பதால் தோல்வியைக் கண்டுள்ளோம் என்பது மறுக்கமுடியாத உண்மை. எனவே இதனைச் சீர் செய்வது தோல்வியைத் தகர்த்தெறியும் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே இதனை சீர் செய்வது தோல்வியை தகர்த்தெறியும் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே இதனை சீர் செய்வது தோல்வியைத்தகர்த்தெறியும்என்பதுஏற்றுக்கொள்ள வேண்டியதொன்றாகும். இளையவர்களிடையே ஒழுக்க விழுமியங்கள்சிதைவடைந்துள்ளமைக்கு வளர்ந்தோரும் காரணகர்த்தாக்களாக அமைகின்றனர். ஒவ்வொரு பிரச்சினைகளையும் இனங் கண்டு தெளிவான விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை வழங்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாகும்.

ஒழுக்க விழுமியங்களைச் சீர் செய்வதற்கு ஏனைய எல்லாப் பாடங்களையும் விட சமய பாடம் மிகமிக வாய்ப்பானதாக அமையும் என்பது நிறுத்திட்டமான உண்மை. மாணவர்கள் விழுமியங்களைத் தம்மீது திணிப்பதை பெருமளவு விரும்புவதில்லை. கசப்பான மருந்தை இனிப்பான பிஸ்கட் ஊடாக வழங்கலாம். இவ்வாறான மருந்தினைவழங்குவதற்குப் பல நுட்பங்களைக் கையாளவேண்டும். இதற்கேற்ப போதனை முறைகளிலும் நடைமுறை சார்ந்த நடைமுறையில் திட்டமிட வேண்டும். எல்லா மாணவர்களும் ஏதோ ஒரு சமயத்துடன்பின்னிப்பிணைந்து இருப்பர்.

எனவே அறநெறிகளை வழங்கும் ஊடகமாக சமயக்கல்வி வளர்த்தெடுக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். ஒவ்வொரு சமயமும் தமக்குரிய நம்பிக்கைகளையும் ஆன்மீக கோட்பாடுகளையும் சமூகம் சார் நெறியாக உள்ளடக்கியுள்ளது. எனவே இவ்வூடகத்தினூடாக நோக்கத்தை நிறைவுக்குக் கொண்டுவருவது இலகுவானதாக அமையும். இதற்கமைவாகவே சமயக் கல்விக்கு கலைத் திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே சமயக்கல்விப் போதனையுடன் மட்டும் நின்றுவிடாது. பல்பரிமாண விருத்தியை ஏற்படுத்துவதொன்றாகும். பிற மதங்களிலுள்ள பொதுவான விழுமியங்களை ஏற்றுக்கொள்ளலாம் என்ற பக்குவத்தையுடையதாகவும் இருத்தல் வேண்டும். இவ்விழுமியங்கள் மாணவர்களிடையே நற்பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டும். இதற்காக வகுப்புக்களிலிருந்தே செயல் வடிவம் கொடுத்தல் வேண்டும். இதனை ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து இடைநிலைக் கல்வி, உயர்நிலைக்கல்வியிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி எடுத்துச்செல்வது உவப்பானதாக அமையும்.

# தமிழகத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு 12,700 துணை ராணுவ வீரர்கள் வருகை



(சென்னை)

சட்டசபை தேர்தலையொட்டி பாதுகாப்பு பணிக்காக 12,700 துணை ராணுவ வீரர்கள் தமிழகத்துக்கு வந்தனர்.

தமிழக சட்டசபை தேர்தல் 16ஆம்திகதி நடைபெற இருப்பதையொட்டி தேர்தல் ஆயத்தப்பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேட்பு மனு தாக்கல், அதன் மீதான பரிசீலனை முடிந்து தேர்தலில் 3 ஆயிரத்து 794 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர். அரசியல் கட்சி தலைவர்கள் அனல் பறக்கும் பிரசாரத்தில் இறங்கி உள்ளதால், தேர்தல் களம் சூடுபிடிக்க தொடங்கி உள்ளது.

தேர்தலையொட்டி, மாநிலம் முழுவதும் 65 ஆயிரத்து 616 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. கூடுதலாக 700 இற்கும்மேற்பட்ட துணை வாக்குச்சாவடிகள் அமைக்கப் பட உள்ளன. தலைநகர் சென்னையில் மட்டும் தேர்தலையொட்டி மொத்தம் 3 ஆயிரத்து 770 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. இதில் பதற்றமான வாக்குச்சாவடிகள் 406 ஆகும்.

துணை ராணுவத்தினர் பதற்றமான வாக்குச் சாவடிகளில் கூடுதலாக பொலிஸாரை பாதுகாப்பு பணியில் அமர்த்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் கைகோர்த்து தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக சட்டசபை தேர்தல் பாதுகாப்பு பணியில் மொத்தம் 300 கம்பனி துணை ராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி தெரிவித்திருந்தார்.

துணை ராணுவ வீரர்கள் சிறப்பு ரயில்கள் மூலம் தமிழகம் வருவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-5)

# சுயேட்சை வேட்பாளரின் மீது தாக்குதல்; கண்டித்து மறியல்





புதுக்கோட்டை தொகுதியில் சுயேட்சையாக போட்டியிடும் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் ஒன்றியச் செயலாளர் சொக்கலிங்கம், அவரது மனைவி கங்கையம்மாள் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் வீதி மறியல் நடைபெற்றது. இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே உள்ள கருப்பட்டி பட்டியைச் சேர்ந்தவர் சொக்கலிங்கம். அதிமுக முன்னாள் ஒன்றியச் செயலாளர். இவரது மனைவி கங்கையம்மாள். இவர், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர். இருவரும் தங்கள் பகுதி பிரச்சினை தொடர்பாக அமைச்சர் சி.விஜயபாஸ்கரை அவரது வீட்டில் கடந்த ஆண்டு சந்தித்தபோது, இவர்களை ஜாதி பெயரைக்கூறி அமைச்சர் திட்டியதாக கூறப்படுகிறது.

இதனால், அமைச்சர் விஜயபாஸ்கர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சொக்கலிங்கத்தின் ஆதரவாளர்கள் போராட்டங்களில் ஈடு பட்டனர். இதையடுத்து கணவன், மனைவி இருவரையும் கட்சியல் இருந்து அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா நீக்கினார்.

இந்நிலையில் புதுக்கோட்டை தொகுதியில் அதிமுக வேட்பாளரை எதிர்த்து சொக்கலிங்கம் சுயேட்சையாக போட்டியிடுகிறார். புதுக்கோட்டை தேர்தல் நடத்தும் அலுவலகத்தில் நடைபெற்ற வேட்பாளர்கள் இறுதி செய்யும் கூட்டத்தில் கலந்துகொண்ட சொக்கலிங்கம், தனக்கு ரம்பம் சின்னம் ஒதுக்கப்பட்டதற்கான உத்தரவைப் பெற்றுக்கொண்டு தனது மனைவி உள்ளிட்டோருடன் அன்றிரவு காரில் ஊருக்குப் புறப்பட்டுள்ளார்.

செம்பட்டிவிடுதி அருகே சென்றபோது, வீதியோரம் திரண்டிருந்த சிலர் காரை மறித்து சொக்கலிங்கம், கங்கையம்மாளை தாக்கியுள்ளனர். காரும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. காயமடைந்த இருவரும் புதுக்கோட்டை அரசு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

இதையடுத்து, இருவரையும் தாக்கிய அதிமுக ஒன்றியச் செயலாளர் சரவணன் உள்ளிட்டோரை கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி சொக்கலிங்கத்தின் ஆதரவாளர்கள், புதுக்கோட்டையிலிருந்து வடவாளம் வழியாக கறம்பக்குடி செல்லும் வீதி, செம்பட்டிவிடுதியில் இருந்து ஆலங்குடி செல்லும் வீதிகளில் பல்வேறு இடங்களில் மரங்களை வெட்டிச் சாய்த்து, தடுப்புகளை ஏற்படுத்தினர். இதனால், அவ்வழியே போக்குவரத்து பாதிக்கப்பட்டது. (இ-5)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**
**DISTANCE LEARNING UNIT- BBM**
**ONLINE EXTERNAL DEGREE PROGRAMME**

University of Jaffna will entertain applications upto 25.05.2015 from suitably qualified persons for the post of Tutor- Mentor (on contract)

**Qualifications:**

(i) A degree from a recognized University in Management Studies or Commerce
(ii) Should have good command in English and Tamil
(iii) Should have computer application skills in MS Office, Learning Management Systems, Internet & e-mail and typing skill in English and Tamil.

selection: by test & Interview

| **Post** | **Salary** |
|---|---|
| Tutor -Mentor (on Contract) | Rs.30,000/-(fixed) p.m |

Applications for the above post shall be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar University of Jaffna** together with a self- addressed stamped envelope 23x10 c.m.in size.

Application forms will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Applicants from the University Sysem/Government Departments Corparations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions.Illegible, incomplete and late applications will be rejected without intimation.Only shortlisted applicants will be called for test and Interview.

**REGISTRAR**
**UNIVERSITYOF JAFFNA,**
**SRI LANKA.**
**04.05.2016**

(C-4545)


# தெலுங்கானாவில் வெயிலுக்கு ஒரே நாளில் 41பேர் உயிரிழப்பு

ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் வெயில் சுட்டெரிக்கிறது. இதனால் பகலில் பொதுமக்கள் வெளியே வரவே அஞ்சும்நிலை நிலவுகிறது. அனல் காற்று வீசுவதால் கடும் அவதிப்படுகிறார்கள்.

இந்த நிலையில் அனல் காற்று வீச்சால் திருப்பதி காட்டுப்பகுதியில் தீப்பிடித்தது. திருப்பதி மலையில் நாராயணகிரி மலையில் கடும் வெயிலின் வெப்பம் காரணமாக மரங்களில் தீப்பிடித்தது. தீ மளமளவென்று மற்ற மரங்கள், செடி, கொடிகளில் பரவியது. இது குறித்து தகவலறிந்த அதிகாரிகள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் அனல் காற்றால் தீ வேகமாக பரவியது. இதனால் தீயை அணைக்க கடுமையாக போராடினர். ஒரு வழியாக காட்டுத்தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் ஒரு ஹெக்டேயர் பரப்பளவில் உள்ள மரங்கள் எரிந்து நாசமாகின.

தெலுங்கானா மாநிலத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் வெயிலுக்கு 41 பேர் பலியாகி இருக்கிறார்கள். இதேபோல் ஆந்திராவில் ஒரே நாளில் 32 பேர் இறந்தனர்.

இந்த நிலையில் தெலுங்கானாவில் சில இடங்களில் மழை பெய்தது. அதிபாபாத் மாவட்டத்தில் சில இடங்களில் மழை பெய்து குளிர்வித்தது. அங்கு 63 மில்லிமீற்றர் மழை பதிவானது.

தெலுங்கானா மாநில கடலோர பகுதியில் குறைந்த காற்றழுத்தம் உருவாகி இருப்பதால் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதேபோல் ஆந்திர மாநிலத்தில் சில மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது. (இ-5)

# ஜெயலலிதாவிற்கு தோல்வி பயம் தொற்றிவிட்டது என்கின்றார் குஷ்பு

'ஜெயலலிதாவுக்கு தோல்வி பயம் ஏற்பட்டு விட்டது," என, காங்கிரஸ் கட்சியின் ஊடக தொடர்பாளர் நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார். நாகர் கோவிலில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், "தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியை வெற்றி பெற செய்ய, தமிழக மக்கள் முடிவு செய்து விட்டனர். தி.மு.க., வேட்பாளர்களை ஆதரித்து, பிரசாரம் செய்வதில், எந்த நெருடலும் இல்லை.

தி.மு.க.காங், தேர்தல் அறிக்கையில், மக்கள் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அ.தி.மு.கவால் இன்னும் தேர்தல் அறிக்கையை தயாரிக்க முடியவில்லை. தி.மு.க, தேர்தல் அறிக்கையில் இலவசங்கள் அறிவிக்கவில்லை. தொழில் வளம் பெருகாததால்தான் தமிழகத்தில் ஒரு கோடி இளைஞர்கள் வேலை இல்லாமல் உள்ளனர். இதனைக் கருத்தில்கொண்டே தி.மு.க கூட்டணியின் தேர்தல் அறிக்கை அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை ஜெயலலிதா நிறைவேற்ற வில்லை. இதனால், இப்போதே ஜெயலலிதாவுக்கு தோல்வி பயம் ஏற்பட்டு விட்டது. அதனால் தான் அதிகாரிகள் மாற்றத்தை எதிர்த்து மனு கொடுத்துள்ளனர் " எனத் தெரிவித்தார். (இ-5)



# சிரியாவில் தீவிரவாதிகள் ரொக்கெட் வீசித்தாக்குதல்

## 28 பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

**வடக்கு சிரிய நகரமான அலெப்போவின் அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இரு பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள சிரியாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான சனா, அலெப்போவில் அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள Muhafaza மாவட்டத்தில் அமைந்துள்ள al-Dabit வைத்தியசாலை மீது தீவிரவாதிகள் பல ரொக்கெட் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளனர். இதில் 3 பெண்கள் உட்பட 17 பேர் பலியானதுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மற்றுமொரு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தீவிரவாதிகள் மேற்கொண்ட ரொக்கெட் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம், அலெப்போவின் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இரு பகுதிகளில் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களில், குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 80 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் புதிய 'ஜிகாதி ஜான்' இந்தியர்





ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் புதிய 'ஜிகாதி ஜான்' ஆக செயற்படுபவர் இந்தியர் என்பது தெரியவந்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் வசித்து வந்த இந்திய வம்சாவளி இந்துவான சித்தார்தா இஸ்லாம் மதத்துக்கு மாறினார். தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் பிரிட்டனில் இருந்து தப்பித்து சிரியாவுக்கு சென்று ஐஎஸ் தீவிரவாத அமைப்பில் சேர்ந்தார்.

ஐ.எஸ். அமைப்பில் பிரிட்டனைச் சேர்ந்த முகமது இம்வஸி என்ற தீவிரவாதி 'ஜிகாதி ஜான்' என்றழைக்கப்பட்டார். வெளிநாட்டு பிணைக்கைதிகளை கழுத்தறுத்து கொலை செய்யும் வீடியோக்களில் முகமூடி அணிந்து தோன்றிய அவர் கத்தியை காட்டி மிரட்டி பேசுவார். அமெரிக்க கூட்டுப்படை தாக்குதலில் அவர் அண்மையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் 'பிரிட்டன் உளவாளிகள்' கொல்லப்பட்டதாக ஐஎஸ் வெளியிட்ட புதிய வீடியோவில் முகமூடியுடன் தோன்றி பேசியவர் சித்தார்தா என்பது தெரியவந்துள்ளது. அவர் ஐ.எஸ். அமைப்பின் புதிய 'ஜிகாதி ஜான்' ஆக உருவெடுத்துள்ளார். அதனை உறுதிப்படுத்தும் வகையில் ஐ.எஸ் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட யாஷிய இன இளம் பெண் நிஹாத் பராகத் என்பவர் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த தொலைக்காட்சி எடுத்த அந்த பேட்டியில், "கிர்குக்கில் நான் பிடிபட்டதும் மோசூலில் உள்ள தீவிரவாத தலைவனிடம் என்னை அழைத்துச் சென்றனர். அவன் பெயர் அபுதர். அவனிடம் யாஷிய இனத்தை சேர்ந்த பெண்கள் பலர் இருந்தனர்" என தெரிவித்துள்ளார்.

அந்த பெண்ணை பேட்டி கண்ட ஜோசப் ஹயாத் என்பவர், ஐஎஸ் அமைப்பில் முக்கிய தலைவராக இருந்த முகமது இம்வஸி உயிரிழந்த பின், அபுதர் என்ற சித்தார்த்தா தான் அந்த பதவிக்கு வந்ததாகவும், பிரிட்டன் அரசால் தேடப்பட்டு வருபவரும் அவர் தான் எனவும் உறுதிபட தெரிவித்துள்ளார். (இ-5)

## மழையை அதிகரிக்க அமீரக நாடுகளில் செயற்கை மலையை உருவாக்க திட்டம்

கடந்த பல தசாப்தங்களாக ஐக்கிய அமீரக நாடுகளில் வெப்பத்தின் அளவு வேகமாக அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் நீர் ஆதாரங்கள் அனைத்தும் வறண்டும், விளை நிலங்கள் வாடியும் உணவுப்பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு அதிகரித்தும் உள்ளது

இந்த நிலையை சமாளிக்கும் பொருட்டு ஐக்கிய அமீரகம் செயற்கையான பச்சை பசேல் மலைகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இதனால் மழை பற்றாக்குறை நெருக்கடியில் தப்பிக்க முடியும் என அந்த நாடுகள் கணக்கிட்டுள்ளன.


இதனையடுத்து அமெரிக்காவை சேர்ந்த சுற்றுப்புறச் சூழல் ஆய்வு பல்கலைக்கழக நிபுணர்களிடம் இதன் முழு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்த குழுவினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

பச்சை பசேல் மலைகளால் காற்று குளிர்ச்சியடைந்து மேகங்கள் உருவாக வாய்ப்பு உண்டு எனவும் இதனால் மழையின் அளவு அதிகரிக்கலாம் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

முதற்கட்டமாக 2.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தில் செயற்கை மலையை எந்த பகுதியில் உருவாக்க வேண்டும் என்பது குறித்த ஆய்வு நடைபெற்று வருகின்றது. (இ-5)




## இந்தோனேசியக் கடற்கிராமத்தில் தேவதையான பெண் பொம்மை



இந்தோனேசியாவில் உள்ள தீவுகளில் ஒன்றான பங்ஹாய் என்னும் தீவில் கரை ஒதுங்கிய பெண் பொம்மை பெரும் தெய்வீகப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


மிகவும் பின் தங்கிய இந்த கிராமத்தில் ஒதுங்கிய அழகிய பெண் பொம்மை அக்கிராமத்தையே பெருத்த பரபரப்பிற்கும் உள்ளாக்கியுள்ளது. இச்சம்பவம் இணையத் தளங்களில் பரவலாக வெளியாகி இருக்கிறது.

கரை ஒதுங்கிய இந்த பொம்மை சொர்க்கத்திலிருந்து இறைவனால் தமக்களிக்கப்பட்ட தேவதையாக கிராம மக்கள் கருதினார்கள். இந்தோனேசியாவில் சூரிய கிரகணத்தை அடுத்து, முஸ்லிம்களால் கொண்டாடப்படும் பெரும்பண்டிகை தினத்தன்று குறித்த பொம்மை கடலில் மிதந்து வந்தது. இதுவே அக்கிராமத்தில் தெய்வீகப் பரபரப்பை பெருமளவில் ஏற்படுத்தக் காரணமாய் அமைந்தது.

பொம்மையை தேவதையாக கருதிய அக்கிராமத்தவர்கள் முஸ்லிம் பெண்கள் அணியும் பாரம்பரிய உடையை பயபக்தியோடு அணிவித்தார்கள். படகில் ஏற்றி கடலில் அதனைக் கொண்டு திரிந்து ஆசீர்வாதம் பெற்றனர். தரைக்கு வந்ததும் அதனை நாற்காலியில் பவ்வியமாக அமரவைத்து எல்லோரும் சென்று வழிபட்டிருக்கிறார்கள்.

இத்தேவதையால் கிராமத்தில் ஏற்பட்டு வந்த பலத்த பரபரப்பும் பரவிவரும் வதந்திகளும் அங்கு பதற்றநிலையை ஏற்படுத்தும் எனக் கருதிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-5)

## பாதியில் நின்ற ரோலர்கோஸ்டர் காப்பாற்றும்படி கதறிய மக்கள்!



பிரித்தானியாவின், Staffordshire-ரில் உள்ள தீம் பார்க்கில், மக்கள் சவாரி செய்த ரோலர் கோஸ்டர் பாதியில் கோளாறாகி நின்றதில், அதில் பயணம் செய்த மக்கள் தங்களை காப்பாற்றும் படி கதறி அழுத சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள மிக பிரபலமான தீம் பார்க்கில் ஒன்று அல்டன் டவர்ஸ்-ல்(Alton towers), அங்கு உள்ள ரோலர்கோஸ்டரில் 28 பேர் சவாரி செய்துள்ளனர். சவாரியின் போது ரோலர் கோஸ்டர் பாதியில்கோளாறாகிநின்றுள்ளது. இதில் சவாரி செய்த 27 பேர் தலை கீழாகத் தொங்கிய படி சிக்கியுள்ளனர்.

நேரம் ஆக ஆக பீதியடைந்த மக்கள், அவர்களை காப்பாற்றும் படி கதறி அழுதுள்ளனர். இந்நிலையில் தீம் பார்க் ஊழியர் ஒருவர் குறித்த ரோலர் கோஸ்டர் மீது ஏறி சிக்கியுள்ளவர்களுக்கு தைரியம்தெரிவித்துள்ளார்.

ரோலர்கோஸ்டரை மீண்டும் தொடக்க முயற்சி செய்த ஊழியர், அரை மணி நேர போராட்டத்திற்கு பிறகு 27 பேரை தரைக்கு கொண்டு வந்துள்ளார். இதை தொடர்ந்து., சமீபத்தில் பெய்த கனமழையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ரோலர் கோஸ்டர் சவாரி மூடப்பட்டதாக, ஊழியர்கள், பார்வையாளர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் பெய்த கனமழையில் குறித்த ரோலர்கோஸ்டர் முறிந்து விழுந்துள்ளது. தற்போது, விடுமுறை நாட்கள் தொடங்கியுள்ளதால், முறிந்து விழுந்த அதே ரோலர் கோஸ்டர் புதுப்பிக்கப்பட்டு இயக்கப்பட்டு வந்துள்ளது தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு இதே ரோலர் கோஸ்டரில் ஏற்பட்ட பயங்கர விபத்தில் சிக்கி ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள், குறித்த தீம் பார்க் உரிமையாளர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர்.

இந்த வழக்கில் Alton towers உரிமையாளர். சட்டத்தை மீறி செயற்பட்டுள்ளது நிருபணமாகி உள்ளதாகவும், அவருக்கு பல மில்லியன் அபராதம் விதிக்கப்படும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் மே.30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.(இ-5)




# பூனைகளை சிறைப்படுத்திய எலிகள்

பூனைகள் இல்லா உலகில் யாருக்குக் கொண்டாட்டம்? சொல்லவும் வேண்டுமா? நிச்சயம் எலிகளுக்குத்தான். பூனைகள் இல்லாத ஊர் இந்த உலகில் இருக்குமா? இருக்கிறதே. நளினப்பட்டி என்ற ஊரில் பூனைகளே இல்லை.


இந்தத் தகவலைப் பல நாடுகளில் உள்ள எலிகளுக்கும் கடிதம் மூலம் தெரிவித்தன நளினப்பட்டியில் உள்ள தலைமை எலிகள். "அப்படியா?" என ஆச்சரியப்பட்டு அந்த ஊரைக் காண ஆப்பிரிக்காவில் இருந்து குலி, மாலி என்ற இரண்டு எலிகள் விமானம் மூலம் நளினப்பட்டிக்கு வந்தன. விருந்தாளி எலிகளுக்குத் தடபுடலாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அனைவருக்கும் சிறப்பு விருந்து பரிமாறப்பட்டது.

ஒரு பாழடைந்த கோட்டைதான் எலிகளின் கோட்டை. விருந்தாளி எலிகளும் அங்கு தங்க வைக்கப்பட்டன.

"இந்த ஊரில் பூனைகள் இல்லை என்பதை நாங்கள் எப்படி நம்புவது?" என குலி எலி கேட்டது.

"சந்தேகம் இருந்தால், நீங்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்" என்று நளினப்பட்டி எலி தலைவர் பதில் கூறியது.

"அப்படியென்றால் இன்று இரவே நாங்கள் சோதனைக்குத் தயார்" என இரு எலிகளும் உற்சாகமாயின.




இரவில் இரு ஆபிரிக்க எலிகளும் சோதனைக்குப் புறப்பட்டன. தெருத்தெருவாகச் சுற்றின. சந்து பொந்துகளில் எல்லாம் எலிகள் ஏறி இறங்கிப் பார்த்தன. அட! எங்குமே பூனைகள் தென்படவில்லை. அவைகளுக்கு வெகு ஆச்சரியம்.

"இந்த ஊரில் பூனைகள் இல்லைதான்" என்று இரு எலிகளும் பேசிக் கொண்டன.

ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த மலைக் கோயில் ஒன்று உள்ளது. அங்கு மட்டும் ஆபிரிக்க எலிகள் போவதற்கு, நளினப்பட்டி எலிகள் தடை விதித்திருந்தன. அப்போது தான் குலி எலிக்கு ஞாபகம் வந்தது.

"அந்த மலைக் கோயிலுக்குச் செல்லக் கூடாது என ஏன் உளளூர் எலிகள் தடை விதித்தன? எனக் குலி எலி, மாலி எலியைப் பார்த்துக் கேட்டது.

"ஆமாம், ஏன் அப்படிக் கூறின? நாம் அங்கு பரிசோதிக்காமல் ஒரு முடிவுக்கு வர முடியாதே?" என மாலி எலியும் கேள்வி எழுப்பியது.

அப்போதே இரு ஆபிரிக்க எலிகளும் மலைக் கோயிலுக்குச் செல்வது என முடிவு செய்தன. பொழுது விடிந்தது. நகர் வேட்டைக்குச் சென்றுவந்த எல்லா எலிகளும் பகலில் ஓய்வெடுக்கச் சென்றன. அனைத்து எலிகளும் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தன.

"இதுதான் சரியான சமயம். நாம் மலைக்கோயிலுக்குச் சென்று வந்துவிடலாம்" எனக் கூறியபடி ஆபிரிக்க எலிகள் கிளம்பின. மலைக்கோயிலுக்குள் நுழைந்ததும் கோயிலின் வாசலைத் தேடின எலிகள். கொஞ்ச தூரத்தில் வாசல் தென்பட்டது. ஆனால், அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது. வெளியே கதவைத் திறக்க முடியாதபடி கற்கள் கொட்டப்பட்டிருந்தன.

உள்ளே இருந்து 'மியாவ்...மியாவ்....' எனச் சத்தம் கேட்டது. ஆபிரிக்க எலிகளுக்குத் திடுக் என்றது. கற்குவியலின் மீது ஏறிச் சிறிய ஓட்டைக்குள் இருந்து இரு எலிகளும் எட்டிப் பார்த்தன. அங்கே ஒரே பூனைக் கூட்டம்.

*(தொடரும்)*




1260 - மங்கோலியப் பேரரசின் மன்னனாக குப்ளாய் கான் முடிசூடினான்.

- 1762 - ரஷ்யாவும் புரூசியாவும் அமைதி உடன்பாட்டை எட்டின.
- 1916 - டொமினிக்கன் குடியரசை அமெரிக்க கடற்படையினர் கைப்பற்றினர்.
- 1925 - தென்னாப்பிரிக்காவில் ஆபிரிக்கான் மொழி அதிகாரபூர்வ மொழியானது.
- 1936 - எதியோப்பியாவின் அடிஸ் அபாபா நகரை இத்தாலியப் படைகள் கைப்பற்றினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நாடு கடந்த நிலையில் நோர்வேயின் அரசு லண்டனில் அமைக்கப்பட்டது.
- 1941 - எதியோப்பியாவின் மன்னர் ஹைலி செலாசி அடிஸ் அபாபா திரும்பினார். இந்நாள் அங்கு வடுதலை நாளாகக் கொண்டாடபபடுகிறது.
- 1942 - பிரித்தானியப் படையினர் மடகஸ்காரைத் தாக்கினர்.
- 1944 - மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலையானார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மன் படைகள் கனடா மற்றும் பிரித்தானியப் படைகளினால் நெதர்லாந்து, டென்மார்க் நாடுகளில் இருந்து விரட்டப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசிகளை எதிரத்து பிராக் நகரில் கிளர்ச்சி ஆரம்பித்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: அவுஸ்ரேலியாவின் நாசிகளின் மோதோசென் வதை முகாம் விடுவிக்கப்பட்டது.
- 1950 - தாய்லாந்தின் ஒன்பதாவது ராமா மன்னராக பூமிபால் அதுள்யாடெ முடி சூடினார்.
- 1955 - மேற்கு ஜேர்மனி முழுமையான விடுதலை அடைந்தது.
- 1961 - மேர்க்குரி திட்டம்: அலன் ஷெப்பார்ட் விணவெளிக்குச் சென்ற இரண்டாவது மனிதரும் முதலாவது அமெரிக்கரும் ஆனார்.
- 1976 - புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயருடனிருந்த இயக்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றப்பட்டது.
- 1980 - ஆறு நாட்களாக தீவிரவாதிகளினால் முற்றுகையிடப்பட்டிருந்த லண்டனின் ஈரானியத் தூதரகத்தின் மீது வான்படையினர் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1981 - ஐரிஷ் புரட்சியாளர் பொபி சான்ட்ஸ் சிறையில் உண்ணாவிரதமிருந்து இறந்தார்.
- 1991 - ஈழத்துப் பெண் கவிஞர் சிவரமணி தனது 23 ஆம் வயதில் தற்கொலை செய்து கொண்டார்.
- 2006 - சூடான் அரசுக்கும் சூடான் விடுதலை இராணுவத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 2007 - கென்யாவின் விமானம் ஒன்று கமரூனில் வீழ்ந்ததில் 15 இந்தியர்கள் உட்பட 118 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள**

- 1818 - கார்ல் மார்க்ஸ், ஜெர்மனிய மெய்யியலாளர். (இ. 1883)
- 1916 - பி. யு. சின்னப்பா, தமிழ்த்திரைப்பட நடிகர், பாடகர். (இ. 1951)
- 1916 - ஜெயில் சிங், இந்தியாவின் 7வது குடியரசுத் தலைவர். (இ. 1994)
- 1922 - டி. ஆர். ராஜகுமாரி, தமிழ்த்திரைப்பட நடிகை.
- 1922 - பி. ஏ. ராஜாமணி, நடிகை.
- 1933 - இரத்னசிறி விக்கிரமநாயக்கா, இலங்கையின் 11 ஆவது, 14 ஆவது பிரதம மந்திரி.
- 1948 - பிச்சுமணி கைவல்யம், தமிழ்க் கவிஞர்
- 1964 - ஆறுமுகம் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர்

**இறப்புகள்**

- 1821 - நெப்போலியன் பொனபார்ட், பிரெஞ்சு மன்னன். (பி. 1769)
- 1948 - புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி. (பி. 1906)
- 1957 - ஆர். மகாதேவன் (தேவன்), நகைச்சுவை எழுத்தாளர். (பி. 1913)
- 1981 - பொபி சான்ட்ஸ், ஐரிஷ் புரட்சியாளர். (பி. 1954)
- 1991 - சிவரமணி, ஈழத்துக் கவிஞை.
- 2006 - நௌஷத் அலி, இந்தித் திரைப்பட இசையமைப்பாளர். (பி. 1919)

**பி. யு. சின்னப்பா**

**தமிழ்த்திரைப்பட நடிகர், பாடகர்**



1916 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை சமத்தானத்தில் உலகநாத பிள்ளைக்கும் மீனாட்சி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சின்னசாமி.புதுக்கோட்டை என்ற தனது பிறந்த ஊரையும் சேர்த்து பி. யு. சின்னபபாவானார். இவருடன் உடன் பிறந்தவர்கள் இரண்டு தங்கைகள்.

சின்னப்பாவின் தகப்பனார் அப்போது பிரபலமான நாடக நடிகர். அவருடன் சேர்ந்து சிறுவயதிலேயே பாடவும் கற்றுக் கொண்டார். சிலம்பம், மல்லு, குஸ்தி ஆகியவையும் பழகினார்.புதுக்கோட்டை உலகநாதபிள்ளை சின்னப்பா அல்லது பி. யு. சின்னப்பா, தமிழ்த் திரைப்பட உலகில் நடிகர், பாடகர், தயாரிப்பாளர் என்று பல துறைகளிலும் புகழ்பெற்று விளங்கியவர்.தத்துவ மீனலோசனி வித்துவ பால சபா என்ற நாடகக் கம்பனியில் சேர்ந்து நடித்தார். இக்கம்பனியில் தான் டி. கே. எஸ். சகோதரர்கள் முக்கிய வேடங்களில் நடித்து வந்தனர். பின்னர் அவர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பனியில் 15 ரூபாய் சம்பளத்தில் சேர்ந்து அவர்களின் நாடகங்களில் நடித்து நல்ல பெயர் வாங்கினார். மிக விரைவிலேயே ராஜபார்ட் போன்ற வேடங்களில் நடித்து புகழ் பெற்றார். அவருடன் அப்போது நாடகங்களில் நடித்தவர்களில் பி. ஜி. வெங்கடேசன், எம். ஜி. இராமச்சந்திரன், எம். கே. ராதா போன்றோர் குறிப்பிடத்த க்கவர்கள்.தனது 19வது வயதில் நாடகக் கம்பனியில் இருந்து விலகி நன்னய்ய பாக வதர், புதுக்கோட்டை சிதம்பர பாகவதார் போன்றோரிடம இசைப பயிற்சி பெற்று இசைக்கச்சேரிகள் செய்து வந்தார். அத்துடன் புதுக்கோட்டையில் இராமநாத ஆச்சாரியாரிடம் சிலம்பம், பாணாத்தடி வீசுதல் ஆகியவைகளை அபிவிருத்தி செய்து கொண்டார். பாரந்தூக்கு வதில் இவருக்கு பல விரு துகளும் கிடைத்திருக்கின்றன. எஸ். ஆர். ஜானகியின் நாடகக் கம்ப னியில் சேர்ந்து இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார்.முதன் முதலில் ஜுபிட்டரின் சவுக்கடி சந்திரகாந்தா மூலம் திரைப்படத்துறையில் புகுந்தார் சின்னப்பா. சுண்டூர் இளவரசனாக அவர் நடித்தார். அத்திரைப்படத்தில் அவர் சின்னசாமி பெயரிலேயே நடித்திருந்தார். தமிழில் முதன் முதலில் இரட்டை வேடத்தில் நடித்த பெருமைக்குரியவர் இவரே.சின்னப்பா 1951 செப்டம்பர் 23 அன்று இரவு தனது 35ஆவது வயதில் புதுக்கோட்டையில் காலமானார். இறப்பதற்கு முன் இவர் நடித்து வெளிவந்த படம் வனசுந்தரி. கடைசியாக இவர் நடித்துக கொண்டி ருந்த படம் சுதர்சன் இவர் இறந்தபின்னர் வெளிவந்தது.

# 72 மணித்தியாலங்களுக்குள் மகிந்தவுக்கு ராணுவ பாதுகாப்பு மீள வழங்க வேண்டும்

## பிக்குகளின் குரல் அமைப்பு எச்சரிக்கையுடன் கோரிக்கை

(கொழும்பு)


**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவப் பாதுகாப்பு அடுத்து வரும் 72 மணித்தியாலங் களுக்குள் அரசாங்கம் மீள வழங்க வேண்டும். அவ்வாறு வழங்காது போனால் மக்களின் ஆதரவுடன் வீதியில் இறங்கி போராடப் போவதாகவும் பிக்குகளின் குரல் எனும் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அந்த அமைப்பின் தலைவர், முரத்தட்டுவே ஆனந்த தேரர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாமல் செய்த தலைவர் ஒருவரினது பாதுகாப்பை நீக்குவது அவரது உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவின் பாதுகாப்பு குறித்து பேச சரத்பொன்சேகாவுக்கு தகுதியில்லை

## கம்மன்பில காட்டம்



மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறித்து பேசுவதற்கான தகுதி, சரத் பொன்சேகாவுக்கு இல்லை என்று பிவித்துரு ஹெல உறுமயவின் பொது செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.


கம்மன்பிலவின் பேஸ்புக் கணக்கில் அவர் இந்த விடயத்தை பதிவு செய்துள்ளார்.

மகிந்தவின் பாதுகாப்பு தொடர்பில் தினேஸ் குணவர்தன, பிரதமரிடம் கேள்வி எழுப்பினார். இதற்கு மறுமொழி வழங்கிய பின்னர் சரத் பொன்சேகாவை பிரதமர் உரையாற்றுமாறு அழைத்தார்.

ஆனால் அவருக்கு பதிலாக இந்த விடயத்துடன் தொடர்புடைய அமைச்சரையே பிரதமர் உரையாறற அழைத்திருக்க வேண்டும் என்று கம்மன்பில கூறியுள்ளார்.

அதேநேரம் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீரவை தாக்கியதைத் தொடர்ந்தே தாங்கள் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# தமது புகைப்பட பனர்கள், கட்அவுட்களை உடன் அகற்றுமாறு பிரதமர் உத்தரவு



தமது புகைப்படங்கள் அடங்கிய பனர்கள், பதாகைகள், கட்அவுட்களை உடன் அகற்றுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புகைப்படம் அடங்கிய பனர்கள், கட்அவுட்கள் மற்றும் பதாகைகள் பல காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த அனைத்து பனர்கள், கட்அவுட்களையும் அகற்றுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேதினமன்று பிரதமரின் புகைப்படம் அடங்கிய பதாகைகள், பனர்கள் ஆயிரக்கணக்கில் கட்சி ஆதரவாளர்களினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

தேர்தல் அல்லது அரசியல் நிகழ்வு ஒன்று அறிவிக்கப்படும் வரையில் கட்சிக் காரியாலயங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தமது புகைப்படத்தை காட்சிப்படுத்த வேண்டாம் என பிரதமர் உத்தரவிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# மண்ணுக்குள் புதையுண்ட விகாரை பிக்கு மாயம்



(கொழும்பு)

பலாங்கொடையில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில், பௌத்த விகாரை மண்ணில் புதையுண்டதோடு, பிக்கு ஒருவரும் காணாமல் போயுள்ளார்.

பலாங்கொடை, பம்பஹின்ன நியதகல எனும் பிரதேசத்தில், நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) மாலை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. காணாமல் போன பிக்குவை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களாக பெய்த அடை மழை காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மணசரிவு அபாயம் காணப்படுவதாக ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில, பிரதேசத்திலுள்ள குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுள்ளதாக, தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### உறவு பெரிதா? நட்பு பெரிதா?

"எனக்கு நட்பே வெரிது! உறவு வெரிதல்ல. உறவு என்பது ஒரு கட்டாயமான உபத்திர வம். நட்பு அப்படி அல்ல. நான் எப்போதுமே உறவுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. நட்புக்குத்தான் தருவேன். எனக்கு உறவினர்களைப் பிடிக்காது" என்றெல்லாம் வேப்பெண்ணெய் குடித்தவர் மாதிரி முக்தை வைத்துக்கொண்டு பேசுவார்.

ஆனால் எனக்குத் தெரிந்து ஒருவர்கூட நண்பர்களை வெறுத்து உறவை விரும்பியதாகத் தெரியவில்லை.

நண்பர்களும் எவருக்கோ உறவினர்களே, உறவினரும் எவராலோ விரும்பப்படும் நண்பர்களே.

இப்படியிருக்க உறவினர் என்றாலே பலருக்கு வெறுப்பு உண்டாகக் காரணம் என்ன?

உறவு என்பது ஒரு வலுக்கட்டாயமான திணிப்பு. அதாவது அவர்களுடன் பேசியே ஆக வேண்டும் அல்லது பழகியே தீர வேண்டும் என்ற உணர்வே ஒருவிதச் சலிப்பும் வெறுப்பும் ஏற்படக் காரணமாக இருந்து விடுகிறது. இது நாமாக ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு மானசீகமான இறுக்கம் தானே தவிர, வேறல்ல.

இரண்டாவது உறவில் போர்மாலிட்டிகளே அதிகம். இதற்காக நாம் உறவின் மீது வெறுப்பு அடைய வேண்டியதில்லை. காரணம் நண்பர்களிடம் எதிர்பார்க்காத இத்தகைய போர்மாலிட்டிகளை உறவினர்களிடம் நாமே எதிர்பார்க்கிறோம். எனவே இது ஒரு பரஸ்பர உணர்வே தவிர வெறுப்பதில் நியதியில்லை.

மூன்றாவது உறவினர்களிடையேயான கட்டாயக் கொடுக்கல் வாங்கல், வரவு செலவுகள், சொத்துப் பங்கீடுகள் போன்றவற்றில் நடக்கும் தவறுகள், முறைகேடுகள் உறவின் மீதான வெறுப்பைப் பன்மடங்காக ஆக்கக் கூடும். இவற்றின் மூலம் உறவினர் மீது வருத்தம் இருந்தால் அதைப் போக்கிக் கொள்வது சற்றுக் கடினம் தான். ஆனால், சிறுசிறு விடயங்களில் பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்துவிட்டுப் புளியங்கொம்பாகப் பார்த்துப் பிடித்துக் கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு ஒவ்வொன்றிலும் அற்பத்தனமாய் நடந்து கொண்டு உறவின் மீது வெறுப்பை வளர்த்துக்கொள்வது உசிதமான செயலல்ல!

அடுத்த பிறவி என்பது உறுதியில்லை. இம்முறை நம் உறவினர்களாகப் பிறந்தவர்கள் மீண்டும் அப்படிப்பிறக்கப் போவதில்லை. ஏதோ ஒரு சக்தி இப்பிறவியில் தந்த பந்தத்தை நாம் காப்பாற்றிக்கொள்ள முயல வேண்டும்.

நண்பர்களே உடன் பிறந்தவர்களைப் போல் பாசத்தைப் பொழிவதில்லையா?

உறவினர்கள் நம்மிடம் நண்பர்களைப் போல் கலந்து பழகுவதில்லையா?

யாராக இருந்தாலும் அந்தத் தனி மனிதன் எப்பேர்ப்பட்டவர்? அவர் நம்மைப் பொறுத்தவரையில் எப்படி நடந்து கொள்கிறார்? நாம் அவரிடம் பதிலுக்கு எப்படி நடந்து கொள்கிறோம் ஆகியவை தாம் முக்கியமே தவிர, உறவு என்றும் நட்பு என்றும் பிரித்துப் பழகுவது என்பது விபரம் தெரிந்தவர்கள் செய்யும் செயலல்ல. **லேனா தமிழ்வாணன்**

# அரசியல் கட்சிகளின் பலப்பரீட்சைக் களமான மேதினப் பேரணிகள்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எச்சரிக்கையையும் மீறி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூட்டு எதிரணிக் குழுவினரின் மேதினம் நடந்தது. இலங்கையின் பிரதான அரசியல்கட்சிகளும் தொழிற் சங்கங்களும் நாடெங்கிலும் 20க்கும் மேற்பட்ட மேதினப் பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்தியிருந்தன. ஆளும் கூட்டணி அரசாங்கத்தில் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெற்கே, காலியில் மேதினக் கூட்டத்தை நடத்தியது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் மேதினப் பேரணியை நடத்தியது. இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் பொது எதிரணி என்ற கூட்டணிக் கட்சிகள் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிரான தனியான மேதினக் கூட்டம் ஒன்றை கொழும்பில் நடத்தியிருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையின் எச்சரிக்கைகளையும் மீறி, அக் கட்சியின் உறுப்பினர்களான மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் பொது எதிரணியின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். பொது எதிரணிக் கூட்டமைப்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் சார்பாகவே தான் அந்த மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ இங்கு உறுதிபடத் தெரிவித்தார். காலியில் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால் கட்சியை சுத்தப்படுத்த வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார். ஏட்டிக்குப் போட்டியான இந்த இரண்டு மேதின பேரணிகளிலும் கணிசமான அளவு ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.



மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கொழும்பில் நடத்திய மேதின பேரணியில், தமிழ் மக்கள் இன்னும் பல்வேறு துயரங்களை அனுபவித்துவருவதாக அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். மலையகத்தில் பிரதான தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் தனித்தனியான பேரணிகளை நடத்தின. வடக்கில், தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மாக்சிச லெனினிசக் கட்சி, உள்ளிட்ட கட்சிகளும் இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கூட்டுறவாளர்கள் அமைப்பு என்பனவும் மேதினப் பேரணிகளையும் கூட்டங்களையும் நடத்தியிருந்தன.



இம்முறை மேதின பேரணிகளை ஆளும் சுதந்திரக் கட்சியின் பலப் பரீட்சைக் களமாக ஜனாதிபதி மைத்திரிபால அணியும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த அணியும் பயன்படுத்திக் கொண்டன. இலங்கையில் தொழிலாளர் உரிமைகளை மையப்படுத்துவதைவிட, அரசியல் கட்சிகள் தங்களின் செல்வாக்குகளை பறைசாற்றுவதற்காகவே மேதினக் கூட்டங்களை பயன்படுத்தும் போக்கு அண்மைய காலங்களில் அதிகரித்துள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



நன்றி பி.பி.சி.

# புலிகள் தலைதூக்குவதாக கூறுவது முற்றிலும் பொய்

## பிரதமர் ரணில் திட்டவட்டம்



(கொழும்பு)

**சிங்கள ஊடகங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தலைதூக்கியுள்ளதாகக் கூறி வருகின்றன. எனினும் எனக்குத் தெரிந்த வரையில் புலிகள் அழித்தொழிக்கப்பட்டு விட்டனர். இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மறறும் இராணுவப் புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்த போது புலிகள் இயக்கம் இனிமேல் தலைதூக்காது என்றே கூறினர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

என்னைசில்ர்தேசத் துரோகி, புலி என்றும் உங்களால் வெற்றி பெறவே முடியாது, நீங்கள் அரசியலிலிருந்து ஒதுங்குங்கள் என்றும் கூறினர். ஆனால் நான் வெற்றி பெற்று காட்டினேன்.

சர்வதேச பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு பிரதமர் ரணில் விககிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

தறபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து தகவல் அறியும் சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கு பிரதமராக எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அரசாங்கத்தின் தரப்பினால் ஊடகங்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

தற்போது புதிய அரசியலமைப்பிற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். இதன்போது அடிப்படை உரிமை பலப்படுத்தப்படும். இதன் போது ஊடக சுதந்திரமும் பலப்படுத்தப்படும். இதற்காக நியமிக்கப்பட்ட அரசிலமைப்பு பேரவை தொடர்பில் நடவடிக்கைக்குழு கூடவுள்ளது.

மக்களுக்கு விசுவாசமான முறையில் ஊடகங்கள் செயற்பட வேண்டும். ஆனாலும் மீள யுத்தமொன்றை ஏற்படுத்துவதற்கே முனைகின்றனர். இருந்தபோதிலும் என்னுடைய தகவல்களை ஊடகங்களினால் பெறமுடியாது.

இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றும் போது யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் பலர் கொல்லப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டதாகக் கூறினார். ஆனாலும் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி வந்தவுடன் அவ்வாறான செயல்கள் இடம்பெறவில்லை.

வடக்கு ஊடகவியலாளர்களை தமிழர்கள் என்று நாம் புறந்தள்ளி விடுவதாக வைத்துக்கொள்வோம்.

அவ்வாறு பிரித்து செயற்படுவதுதானே ஊடகங்களின் செயற்பாடு? அவ்வாறே நாமும் செயற்பட்டாலும் அப்படியானால் பிரகீத் எக்னெலிகொடவிற்கு என்ன நடந்தது? அவரை புலிகள்என்றே கூறினர.

அவ்வாறு சிங்கள ஊடகங்களே கூறின. பிரகீத் எக்னெலிகொட உண்மைக்காக செயற்பட்டவராகும். எனினும் பிரகீத் எக்னெலிகொட பற்றி பேசும் போது இராணுவத்தை காட்டிக் கொடுப்பதாகக் கூறினர்.

அத்துடன் தற்போது சிங்கள ஊடகங்கள் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் தலைதூக்கியுள்ளதாகக் கூறி வருகின்றன. எனினும் எனக்கு தெரிந்த வகையில் புலிகள் அழித்தொழிக்கப்பட்டு விட்டனர்.

இருந்தபோதிலும் இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்த போது புலிகள் இயக்கம இனிமேல் தலைதூக்காது என்றே கூறினர். ஆனாலும் இதனுடன் சில அரசியல் குழுக்கள செயற்பட்டு வருகினறன.

துட்டகைமுனு என்று தன்னை அடையாளப்படுத்த கூடிய மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலும் விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தது. அந்த அரசன் விடுதலை புலிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அரசருக்கு விடுதலை புலிகளுடன் ஒப்பந்தம் செய்ய முடியும்.

எவ்வாறாயினும் ஊடக சுதந்திரத்திற்கு நாம் தயாராகவே உள்ளோம். ஆனாலும் ஊடகங்கள் பழைய யுகத்தை நோக்கி பயணிக்கவே முனைகின்றன. அந்த பயணத்தையே நீங்கள் விரும்பினால் அதற்கும் நாங்கள் தயாராகவே உள்ளோம். அதற்காக எம்மால் காலை முதல் மாலை வரைக்கும் செயற்பட முடியும்.

அதேபோன்று ஹிட்லரின காலத்தின் பின்னர் ஜனநாயகவாதிகளுக்கு சுதந்திரமாக செயற்பட முடியாது என்ற சட்டம் உள்ளடக்கப்பட்டது. அதனை இலங்கை அரசியலமைப்பில உள்ளடக்க முடியும்.

இந்நிலையில் தற்போது ஊடக சுதந்திரத்திற்காக ஊடகங்கள் செயற்படுவதாக தெரியவில்லை. அதற்கு மாறாக அரசாங்கமே ஊடக சுதந்திரத்திற்காக போராடி வருகின்றது. இவ்வாறு அரசாங்கம் ஊடக சுதந்திரத்திற்காக போராடும் நாடு எங்காவது உளளதா? என்று அவர் கேள்வி எழுப்பினார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 711

Search for people, places and things   Nagendram   Home

### நிஷாந்தன்

முந்திக்கொண்ட முதல் செங்கல்
கோவிலின் அடித்தளத்தில்
நின்று விடும்!
காத்திருந்த கடைசி செங்கல்தான்
கலசம் தொடும்!
சாதிக்க-பொறுமை
மிகமிக அவசியம்!

### ஜீவா




### பிரபு



இல்லாதோர் கேட்கும் போது இல்லை என்று கைவிரிக்கும் எல்லோரும் இல்லாதவர்களே!

### மினு




### சங்கர்

பெண்: ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?

கஸ்டமர் கேர்: ஆமாம் சொல்லுங்க மேடம்

பெண்: என் அஞ்சு வயசு பையன் சிம் கார்டு ஐ விழுங்கிட்டான்.

கஸ்டமர் கேர்: அப்படினா டாக்டர் கிட்ட கூட்டி கிட்டு போங்க மேடம்

பெண்: இல்லை அதுல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி. அவன் பேசும்போது காசு போகுமா சார்?

கஸ்டமர் கேர்: ?????

### தர்சினி



பையன்:
ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கலாமா?

பெண் :
செருப்பு பிஞ்சிடும்...



பையன் :
பரவாயில்ல... கையில் எடுத்துக்கிட்டு ஓடலாம்...

www.j.mp/tamilsms

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

...அதன்பின் திருடாதே ஏ.எல்.எஸ்.வெளியீடாக மூன்று ஆண்டு கழித்து வெளி வந்தது. மிகப் பெரிய வெற்றிப் படமாக ஓடியது.

அந்தப் படத்துக்கு நான் தான் அஸ்திவாரம் என்ற உண்மை பலருக்குத் தெரியாமல் போயிற்று.

ஆனால் சரோஜாதேவிக்கு எல்லாம் தெரியும். அதனால் திருடாதே நூறாவது நாள் வெற்றி விழா நடைபெற்ற அன்று நூறு தேங்காய், நூறு மாம் பழம், நூறு வாழைப் பழம் கொண்டு வந்து என்னைப் பார்த்து வணக்கம் தெரிவித்து கொடுத்துவிட்டுச் சென்றார்.

இவ்வாறு சின்ன அண்ணாமலை கூறியுள்ளார்..

திருடாதே தயாராவதில் மிகவும் தாமதமானதால் நாடோடி மன்னன், கல்யாணப் பரிசு ஆகிய படங்கள் அதற்கு முன்னதாகவே வெளிவந்து விட்டன. அவற்றின் மூலம் சரோஜாதேவி பெரும் புகழ் பெற்றார்.

திருடாதே வெற்றியின் மூலமாக சமூகப்

# தமிழ் சினிமா வரலாறு

**153**

## சமூகப் படங்களுக்கு எம்.ஜி.ஆரை திருப்பிய "திருடாதே"



படங்களில் நவீன உடைகளில் நடிக்கலாம் என்ற நம்பிக்கை எம்.ஜி. ஆருக்கு உண்டாயிற்று.

சரித்திரப் படங்களை உருவாக்க செலவு அதிகம். அதிக காலம் பிடிக்கும். ஆனால் சமூகப் படங்களை குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தயாரிக்கலாம்.

எனவே எம்.ஜி.ஆர்.படங்கள் வரிசையாக வரத் தொடங்கின.

1961 இல் திருடாதேக்குப் பிறகு சபாஷ் மாப்பிள்ளே, நல்லவன் வாழ்வான், தாய் சொல்லைத் தட்டாதே ஆகிய மூன்று படங்கள் எம்.ஜி.ஆர் நடித்து வெளி வந்தன. இதில் சபாஷ் மாப்பிளே என்ற படம் மாலினியின் சொந்தப் படம். (சபாஷ் மீனாவில் சிவாஜியுடன் கதாநாயகியாக நடித்தவர் மாலினி).

மாலினிக்கு படங்களே இல்லை. அவர் வேண்டிக் கொண்டதால் சபாஷ் மாப்பிளே படத்தில் நடிக்க எம்.ஜி.ஆர் சம்மதித்தார். எம்.ஜி.ஆருடன் கதாநாயகியாக மாலினி நடித்தார்.

படத்தை மாலினியின் கணவர் ராகவன் டைரக்ட் செய்தார். டைரக்ட் செய்தார் என்பதை விட டைரக்ட் செய்யக் கற்றுக் கொண்டார் என்று தான் கூற வேண்டும்.

விளைவு இந்தப்படம் சரியாக ஓடவில்லை.

அரசு பிக்சர்ஸ் தயாரித்த நல்லவன் வாழ்வான் படத்தில் எம்.ஜி. ஆரும் ராஜ சுலோசனாவும் ஜோடியாக நடித்தனர். அண்ணா எழுதிய கதை இது. ப.நீலகண்டன் டைரக்ட் செய்தார். இது சராசரி படம்.

**தாய் சொல்லை தட்டாதே**

07.11.1961 இல் வெளியான தாய் சொல்லைத் தட்டாதே பெரிய வெற்றிப்படம்.

இது சாண்டோ சின்னப்பதேவர் தயாரித்த படம்.1956 இல் படக் கம்பனி தொடங்கிய சின்னப்ப தேவர் எம்.ஜி.ஆரை வைத்துத்தான் தனது முதல் படத்தை (தாய்க்குப்பின் தாரம்) தயாரித்தார். இருவரும் நீண்டகால நண்பர்கள். எனினும் தாய்க்குப்பின் தாரம் படத்தை எம்.ஜி. ஆரிடம் அனுமதி பெறாமல் தெலுங்கில் டப் செய்து வெளியிட்டதால் தேவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது.

இதனால் சின்னப்ப தேவர் வேறு நடிகர்களை வைத்து நீல மலைத் திருடன் (ரஞ்சன்), யானைப்பாகன் (கல்யாண் குமார்), வாழவைத்த தெய்வம் (ஜெமினி கணேசன்), கொங்கு நாட்டுத் தங்கம் (ஆனந்தன்) முதலிய படங்களை எடுத்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

# பிரித்தானியாவில் கல்வியில் முன்னிலை வகிக்கும் தமிழ் மாணவர்கள்

பிரித்தானியாவில் வாழும் தமிழ்மொழியைத் தமது தாய் மொழியாகக் கொண்ட சிறுவர்கள், ஆங்கில மொழியைத் தமது சொந்த மொழியாகக் கொண்ட சிறுவர்களை விட சிறப்பாகச் செயற்படுகிறார்கள் என்பது தெரிய வந்திருக்கிறது.

ஒரு ஆண்டில் இடம்பெறும் ஆறு பரீட்சைகளில் ஆங்கில மொழியைத் தமது சொந்த மொழியாகக் கொண்டுள்ள மாணவர்களை விட ஆசிய மொழிகளைப் பேசுகின்ற மாணவர்கள் மிகச் சிறப்பான முறையில் தேர்ச்சி அடைந்துள்ளதாக கல்வித் திணைக்களத் தகவல்கள் சுட்டி நிற்கின்றன.

பிரித்தானியாவில் ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்யும் மாணவர்களுக்காக இடம்பெறும் பரீட்சையில் சீன மற்றும் தமிழ் மொழி பேசும் மாணவர்கள் ஐந்து அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெறுகின்றனர். 10 மற்றும் 11 வயது மாணவர்களுக்கான வாசிப்புப் பரீட்சைகளில் ஆங்கில மொழியைத் தமது முதலாவது மொழியாகக் கொண்ட மாணவர்களில் 50 சதவீதத்தினரே ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்றனர்.

இருப்பினும் தமது வீடுகளில் சீன மொழிபேசும் 60 சதவீதமான மாணவர்கள் ஆங்கில மொழி பேசும் மாணவர்களைப் போன்று வாசிப்புப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெறுகின்றனர். இலங்கை மற்றும் இந்தியாவின் சில பகுதிகளில் பேசப்படும் தமிழ் மொழியைத் தமது தாய்மொழியாகக் கொண்ட 53 சதவீத மாணவர்கள் ஆங்கில வாசிப்புப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெறுகின்றனர்.

கணித பாடப் பரீட்சையில் சீன மொழி பேசும் மாணவர்கள் 70 சதவீத உயர் புள்ளிகளையும், தமிழ் மாணவர்கள் 69 சதவீத புள்ளிகளையும் பெறுகின்றனர். கணித பரீட்சையிலும் ஆங்கில மொழி பேசும் மாணவர்களை விட தமிழ் மற்றும் சீன மாண வர்கள் அதிக புள்ளிகளைப் பெறுவதாக புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணித பாடப் பரீட்சையில் 41 சதவீதமான ஆங்கில மாணவர்களே சித்தியடைகின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தரநிலைப்படுத்தப்பட்ட பரீட்சைகளில் (SATS) சீன மொழியைப் பேசும் 1600 மாணவர்கள் சிறந்த புள்ளிகளையும் தமிழ் மொழி பேசும் 2800 மாணவர்கள் சிறந்த புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

பிரித்தானியாவில் காலாதி காலமாக வாழும் மக்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் காண்பிக்கும் அக்கறையை விட, பிரித்தானியாவில் குடியேறியுள்ள மக்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறையுடன் செயற்படுவதுடன் தமது ஆதரவு களையும் வழங்கி வருவதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஆங்கிலத்தைத் தமது சொந்த மொழியாகக் கொண்டிராத பிரித்தானியப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கல்வித் திணைக்களம் பதிவு செய்துள்ளது.

பிரித்தானியாவில் 317 வேற்று மொழி மாணவர்கள் கல்வி கற்பதாகவும் இவர்களில் உருது மொழியை 144,000 மாணவர்களும் போலந்து மொழியை 113,000 மாணவர்களும் பஞ்சாப் மொழியை 105,000 மாண வர்களும் தமது தாய்மொழியாகக் கொண்டுள்ளதாக அண்மைய புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'மாணவர்கள் ஒவ்வொரு வரினதும் புறச்சூழலைப் பொறுத்தே அவர்களது கல்வித் தரமும் வேறுபடுவதை இந்தப் புள்ளி விபரத்தின் மூலம் அறிய முடிகிறது. இந்த அடிப்படையில், சீன மற்றும் தமிழ் மொழி பேசும் மாணவர்கள் பாடசாலையில் பெறும் கல்வியறிவை விடத் தமது வீடுகளில் அதிகளவில் கல்வி யறிவையும் அதற்கான புறச் சூழலையும் பெறுகின்றனர். இவர்களது பெற்றோர்கள் இவர்களது கல்விக்கு உறுதுணையாக விளங்குகின்றனர்' என பிரித்தானியாவைச் சேர்ந்த சமூக ஆய்வாளரான அனஸ் ராசியா டீவால் குறிப்பிட்டுள்ளார்.

'பிரித்தானிய அரசாங்கமானது தனது நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் சிறந்த கல்வியை வழங்கி வருகிறது. இதன் மூலம் ஒவ்வொரு பிள்ளைகளும் இளையோரும் அவர்களது புறச்சூழலுக்கு அப்பால் சிறந்த, தமக்குத் தேவையான கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும்' என பிரித்தானிய கல்வித் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

'எமது பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக நாங்கள் பாரபட்சமற்ற கல்வியை வழங்கி வருகிறோம். இது எமது பிரதான திட்டமாகும். சில இனக்குழும மாணவர்களை விட வேறு சில இனக்குழும மாண வர்கள் கல்வியில் சிறப்பாகச் செயற்பட முடிவதை நாம் அறி வோம். இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

இந்த மாணவர்களின் கலாசார, பூகோள மற்றும் பொருளாதாரக் காரணிகள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன' என கல்வித் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வழிமூலம் – express
மொழியாக்கம்- நித்தியபாரதி

# முழுமையாக முகத்தை மூடும் தலைக்கவச தடையுத்தரவுக்கு எதிரான விசாரணை நீடிப்பு

(கொழும்பு)

முற்றாக முகத்தை மறைக்கக் கூடிய தலைக் கவசத்தை அணிவதற்கு பொலிஸாரால் கொண்டுவரப்பட்ட சுற்றுநிருபத்திற்கு தடை விதிக்குமாறு கோரப்பட்டமையை அடுத்து நீதிமன்றம் இதற்கான தடை உத்தரவை விதித்திருந்தது.

அத்துடன் இந்தத் தடை உத்தரவானது ஓகஸ்ட் மாதம் 4 திகதி வரை நீடிக்கப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதற்கான ஒழுங்கு முறைகள் இதுவரை ஒழுங்கு செய்யப்படாததால் இந்த விடயம் தொடர்பில் முடிவெடுப்பதற்கு இன்னும் 3 மாதங்கள் தேவைப்படுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த தலைக்கவசம் மீதான மனு ஓகஸ்ட் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# தப்பிச்சென்றால் சுட்டுக் கொல்லுமாறு மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்

## பொன்சேகா குற்றச்சாட்டு





சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில், தப்பிச் செல்ல முயற்சித்தால் தம்மை சுட்டுக் கொலை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனக்கு 60 பேர் வரையிலான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அதனை உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைய 30 ஆக மகிந்த குறைத்தார்.

இவ்வாறு மிகவும் மோசமாக நடந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவிற்கு தனது பாதுகாப்பு பற்றி மட்டும் பேச உரிமையில்லை.

பயங்கரவாதம் நிலவிய காலத்தில் படையினர் பொலிஸாரின் கடமைகளைச் செய்தனர்.

எனினும் பயங்கரவாதம் இல்லாத காலத்தில் அவ்வாறு பொலிஸாரின் கடமைகளை படையினர் செய்ய வேண்டிய அவசியமில்லை.

எனவே மகிந்த ராஜபக்ஷ என்ற நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸ் பாதுகாப்பில் திருப்தி கொள்ள வேண்டும்.

அரசியல்வாதி ஒருவருக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து தீர்மானிக்க வேண்டியது அரசாங்கமே, அரசாங்கத்திற்கு அந்த உரிமையுண்டு.

இராணுவ கப்டன்களை மகிந்த அருகில் வைத்துக் கொண்ட போதிலும் அவர்களுக்கு பிரபு பாதுகாப்பு பற்றி எதுவித பயிற்சியும் வழங்கப்படவில்லை.

கப்டன் நெவில் என்பவருக்கு சாதாரண உத்தியோகத்தர் ஒருவருக்கான பாதுகாப்புக்கூட வழங்கப்படவில்லை.

கிருலப்பனை தரப்பு எவ்வித ஒழுக்கமும் இன்றி கூச்சலிடுகின்றார்கள்.

எனக்கு அன்று 20 பாதுகாப்பு உத்தியோகத்தர்களே வழங்கப்பட்டனர். நான் கமாண்டோக்களை கேட்ட போது ஓய்வு பெறுவதனால் வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் பாதுகாப்பு வழங்குமாறு தேர்தல் ஆணையாளரிடமும் கோரியிருந்தேன். எனினும் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ அதற்கு அனுமதியளிக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை படைகளின் சேனாதிபதி அங்கீகரிக்கவில்லை என்றால் அது குறித்து கேள்வி எழுப்ப மகிந்தவிற்கு உரிமையில்லை.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் 10 நிமிடங்களில் எனது பாதுகாப்பு நீக்கப்பட்டது. கடுமையான பயங்கரவாதிகளுடன் என்னை சிறையில் அடைத்தார்கள்.

என்னை நீதிமன்றம் அழைத்துச் செல்லும் போது பாதுகாப்பிற்கு இரண்டு ரி56 ரக துப்பாக்கிகளே வழங்கப்பட்டன, 6 சிறைச்சாலை உத்தியோகத்தர்களே பாதுகாப்பு வழங்கினர்.

நான் தப்பிச் செல்ல முயற்சித்தால் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

பயங்கரவாதிகளுடன் ஒன்றாக பேருந்தில் சிறைச்சாலை செல்ல நேர்ந்தது. இந்த வகையிலேயே இராணுவத் தளபதியை அவர்கள் கவனித்தார்கள்.

இவ்வாறான நபர் ஒருவர் தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோர அருகதையற்றவர். தற்போது எனக்கு 15 பொலிஸ் உத்தியோகத்தர்களே பாதுகாப்பு வழங்குகின்றனர்.

போரைச் செய்த இராணுவத் தளபதிக்கு 15 பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பு போதுமானது என்றால், போர் இடம்பெற்ற காலத்தில் பதவி வகித்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு 200 பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் இருப்பதில் சிக்கல் இருக்க முடியாது.

அன்று சரத் பொன்சேகாவிற்கு எத்தனை பேர் பாதுகாப்பு வழங்க வேண்டுமென தீர்மானித்தது கோத்தபாய ராஜபக்ஷவேயாகும்.

ஜானக பெரேராவின் கொலைக்கு முழுமையாக முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமே பொறுப்புச் சொல்ல வேண்டும்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் இராணுவப் பாதுகாப்பும் நீக்கப்பட வேண்டும். கோத்தபாயவின் பாதுகாப்பிற்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதுமானதாகும்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பிலும் சந்தேகம் காணப்படுகின்றது.

குண்டு துளைக்காத கார் மீது 25 மீற்றர் தொலைவில் இருந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியிருப்பார்களா, பயங்கர வாதிகள் அவ்வளவு முட்டாள்கள் இல்லை.

எனவே இந்த தாக்குதல் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரினது திட்டமாகும்.

போர் இடம்பெற்ற காலத்திலும் மகிந்த ராஜபக்ஷவிற்கு உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதாக புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை எதனையும் விடுக்கவில்லை.

இராணுவம் இன்றி தூக்கம் போகவில்லை என்றால், பொலிஸாருடன் வீதியில் இறங்கப் பயம் என்றால் முன்னாள் ஜனாதிபதி வீட்டில் இருக்க வேண்டியது தான்.

மகிந்த ராஜபக்ஷ ஓய்வு பெற்றுக்கொண்ட ஜனாதிபதியைப் போன்றே செயற்பட வேண்டும்.

அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்டால் பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்பட வேண்டுமென சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-5)

# கிருலப்பனை மேதினக்கூட்டத்துக்கு சென்ற நபரைக் காணவில்லை என முறைப்பாடு

(கொழும்பு)

கிருலப்பனையில் மகிந்த தலைமையில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்திற்கு பங்குபற்ற வந்த நபரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தேகம-கனேகம பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதான ரணசிங்க என்ற நபரே காணாமற் போயிருப்பதாக பத்தேகம பொலிஸில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான குறித்த நபர் மே தினமான முதலாம் திகதி 8 மணியளவில் சில குழுவினருடன் பேருந்து ஒன்றில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும், நேற்று முன்தினம் வரை அவர் வீடு திரும்பவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தேகம பொலிஸார் இந்த நபர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர். (இ-5)

# செய்தித்துளிகள்

## புதிய மாணவர் மன்றம் தெரிவு

சுன்னாகத்தில் அமைந்துள்ள லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டிற்குரிய புதிய மாணவர் மன்றம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

இம்மாணவர் மன்றத்தின் தலைவராக ரா. வினோஷனும் செயலாளராக அ.வருஜிகாவும் பொருளாளராக ம.ஜெஸ்மின் குருஸ்ும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இம் மாணவர் ஒன்றியத்தின் எதிர்கால செயற்றிட்டங்களாக மருத்துவக் கண்காட்சி, மருத்துவ முகாம்கள் நடத்தல் மற்றும் மக்கள் மருத்துவ சஞ்சிகையினை தொடர்ந்து வெளியிடல் ஆகியவை மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-5)

## குளவிக் கொட்டுக்குள்ளான பிக்கு உட்பட 4 பேர் வைத்தியசாலையில்

தலவாக்கலை நகரில் நேற்று குளவிக் கொட்டுக்குள்ளான பௌத்த பிக்கு உட்பட நால்வர் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தலவாக்கலையில், சுமன சிங்கள வித்தியாலயத்திற்கு செல்லும் பாதைக்கு அருகில் வைத்து மேற்படி நால்வரும் குளவிக் கொட்டுக்குள்ளாகியுள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாக தெரியவருகிறது. (இ-5)

## ஜெனரல் சுமித்துக்கு சிகிச்சை

விபத்தொன்றின் போது தலையில் காயமடைந்த மேஜர் ஜெனரல் சுமித் மானவடு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவருக்கு அவசர சிகிச்சை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமித் கடந்த ஆட்சியின் போது மலேசிய உயர்ஸ்தானிகராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜெனரல் சுமித் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா தோல்வியடைந்ததை அடுத்து மகிந்தவின் உத்தரவின் பேரில் சரத் பொன்சேக்காவின் பாதுகாப்பு படைவீரர்களை கைது செய்வதற்கு முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 8 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் 17 வயதுச் சிறுவன் மறியலில்!

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி சிகரம் கிராமத்தில் எட்டு வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மே 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.ஐ.எம். றிஷ்வி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ள சிறுமியின் மாமா முறையான சிறுவனை மே மாதம் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (இ-5)

## தடைசெய்யப்பட்ட வலையை பயன்படுத்திய இருவர் கைது

அம்பாறை, சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடியிருப்புமுனை ஆற்றில் தடை செய்யப்பட்ட கங்கூஸ் வலையைப் பயன்படுத்தி நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு பேரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், இவர்களிடமிருந்து குறித்த கங்கூஸ் வலையைக் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான வலையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் சிறிய மீன் இனங்கள் அழிவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## தேசிய எழுச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) தேசிய எழுச்சி மாநாடு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. அறிவித்துள்ளார். (இ-5)

# துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கான பெண் குறித்து இராணுவம் விசாரணை

(கொழும்பு)

தந்திரிமலை-போகொட இராணுவ முகாமிற்கு அருகில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாய் நேற்று முன்தினம் துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கானமை, குறித்த முகாமில் இடம் பெற்ற துப்பாக்கி பிரயோக பயிற்சியின் போது இடம் பெற்றுள்ளதா என விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தபோது அவரின் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச் சூடு பட்டுள்ளதுடன் பின்னர் தந்திரி மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் நிலை பாரதூரமாக இல்லை என வைத்திய சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-04.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.58 | 147.39 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.90 | 215.27 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 163.96 | 170.47 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 149.21 | 155.44 |
| கனடா | டொலர் | 112.06 | 116.73 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.48 | 111.48 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.64 | 109.67 |
| இந்தியா | ரூபா | 2.1866 | ------- |
| சீனா | யுவான் | 22.4305 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.5620 |
| குவைத் | டினார் | 484.8455 |
| ஓமான் | ரியால் | 378.5244 |
| கட்டார் | ரியால் | 40.0275 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8587 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6749 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 80 | 50 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 65 | 90 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 50 | 60 | 70 | 80 | 80 |
| தக்காளி | 140 | 140 | 100 | 120-160 | 100 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 | 50 | 60 | 80 | 50 |
| கோவா | 120 | 100 | 70 | 80 | 80 | 120 | 100 |
| கரட் | 100 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 15 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 80 | 30 | 30 | 80 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 100 | 80 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 65 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 110 | 120 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 80 | 50 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 100 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 70 | 80 | 100 | 80 | 150 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 60 | 80 | 70 | 120 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 | 80 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 300 | 200 | 300 | 250 |
| போஞ்சி | 160 | 200 | 120 | 180 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | — | 60 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 20 | 40 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 350 | 400-500 | 350 | 400 | 300 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 15-30 | 50 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 300 | 110 | 160 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 30 | 70 | — | 100 | 50 |
| பொன்னாங்காணி | 20 | — | 20 | 40 | 40 | 25 | 25 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சந்திரிகா-பிரபாகரன் சமரசப் பேச்சு முறிந்தது 173

**11 பேர் சாவு**

இந்தத் தாக்குதலில் கடற்படையினர் 11 பேர் பலியானார்கள். 23 பேர் காயம் அடைந்தனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடல் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினார்கள். விடுதலைப்புலிகள் தரப்பிலும் 4 பேர் இந்தச் சம்பவத்தில் உயிர் இழந்தனர். அவர்களில் ஒருவர் பெண்.

**தற்கொலைப்படை**

கடற்புலிகள் உடலில் கடற் கண்ணிவெடிகளைப் பொருத்தி இந்தத் தாக்குதலை நடத்தினார்கள்.

கடைசியாக நடந்த பேச்சு வார்த்தையின் போது விடுதலைப்புலிகளின் கோரிக்கையை ஏற்று கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு தடையை அரசு தகர்த்தியதன் விளைவு தான் இந்த தாக்குதல் என்று கடற்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான உயர் மட்ட பாதுகாப்புக் குழு 19 ஆம் திகதி அவசரமாகக் கூடி இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதித்தது.

**பாதுகாப்பு அமைச்சர்திரும்பினார்**

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் மறுவாழ்வுப் பணி நடந்து வந்தது. பாதுகாப்பு அமச்சர் அனுருத்தா கிராமங்களில் தங்கி இருந்து இந்த ஏற்பாடுகளைக் கவனித்து வந்தார்.

விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடர்ந்து அவர் தனது பயணத்தை ரத்து செய்துவிட்டு கொழும்பு திரும்பினார்.

**மீண்டும் பொருளாதார தடை**

சமரசப் பேச்சு நடந்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் வசமுள்ள பகுதிகளுக்கு பல்வேறு அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப அரசு தடையை நீக்கி இருந்தது.

விடுதலைப்புலிகள் மீண்டும் தாக்குதலைத் தொடங்கி இருந்ததால் அரசும் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்ல மீண்டும் தடை விதித்தது. ஜனாதிபதி சந்திரிகா தலைமை யில் நீண்ட நேரம் நடந்த பாதுகாப்புக் குழு கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியில் கடலில் மீன் பிடிப்பதற்கு சில கட்டுப்பாடுகளை அரசு தளர்த்தி இருந்தது. அந்த உத்தரவு உடனடியாக ரத்து செய்யப்படுவதாக அரசு அறிவித்தது.

**தாக்குதல்**

இதற்கிடையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணத்தின் மீது சிங்கள இராணுவம் தாக்குதல் நடத்தியது.

கடற்படையின் பீரங்கிக் கப்பல்கள், விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான 2 படகுகளை குண்டு வீசி அழித்தன. புலிகளின் முகாம்கள் மீதும் கடற்படை தாக்குதல் நடத்தியது.

வெற்றிலைக்கேணி கிராமத்தில் விடுதலைப்புலிகள் பயணம் செய்த 2 படகுகளும் அழிக்கப்பட்டன.

**துப்பாக்கிச் சண்டை**

கிழக்குப் பகுதியில் பொலனருவ மாவட்டம் வெலிகந்த என்ற இடத்தில் உள்ள சிங்கள இராணுவ முகாமை 21 ஆம் திகதி இரவு 11 மணியளவில் விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கினார்கள். இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் சுமார் 1000 விடுதலைப்புலிகள் ஈடுபட்டனர்.

இரு தரப்பினருக்குமிடையே பயங்கரத் துப்பாக்கிச் சண்டை நடந்தது. முகாமுக்கு விடுதலைப்புலிகள் தீ வைத்தனர்.

**ஹெலிகொப்டர்கள்**

இது பற்றிய தகவல் கிடைத்ததும் அருகில் உள்ள மற்ற முகாம்களில் இருந்து சிங்கள விமானப்படை வீரர்கள் ஹெலிகொப்டரில் அங்கு விரைந்தனர். ஆனால் வானிலை மோசமாக இருந்ததாலும் தொடர்ந்து சண்டை நடந்து கொண்டிருந்தாலும் அவர்களால் அங்கு இறங்க முடியவில்லை.

காலை 8 மணி வரை இரு தரப்பினருக்குமிடையே சண்டை நீடித்தது.

இதில் 21 சிங்கள இராணுவ வீரர்கள் பலியானார்கள். மேலும் 40 பேர் காயம் அடைந்தனர்.

முகாமில் இருந்த மற்ற இராணுவ வீரர்கள் அருகில் உள்ள காட்டுக்குள் தப்பி ஓடி விட்டனர்.

**கைப்பற்றினார்கள்**

இதைத் தொடர்ந்து அந்த முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

இந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 14 பேர் பலியானார்கள்.

போர் நிறுத்தம் முடிந்த பிறகு விடுதலைப்புலிகள் நடத்திய பெரிய தாக்குதல் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தை மீட்க முப்படையினரும் தாக்குதல் நடத்தினார்கள். விமானங்கள் குண்டு வீசி தாக்கின.

சமரசப் பேச்சு முறிந்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுக்குப் பதிலடி கொடுக்க ஜனாதிபதி சந்திரிகா முடிவு செய்தார்.

இதன் ஒரு கட்டமாக முப்படையினர் யாழ்ப் பாணத்தில் பெரிய தாக்குதலை 09.07.1995 அன்று தொடங்கினார்கள்.

முன்னதாக யாழ்ப்பாண நகரில் ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பித்தது. இதற்கான அறிவிப்பு நோட்டீசுகளை ஹெலிகொப்டரில் இருந்து இராணுவத்தினர் போட்டார்கள்.

வீட்டை விட்டு யாரும் வெளியே வர வேண்டாம், பாடசாலைகள், கோவில்களில் யாரும் போய் தங்க வேண்டாம் என்று பொது மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது.



(தொடரும்)

இரும்பில் துருப்பிடித்தால் வலிமை வாய்ந்த தூணையே சாய்க்கும்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கைப் பாராளுமன்ற ஜனநாயகம் கண்டீரோ!

ஜனநாயக ஆட்சியில் பாராளுமன்றமே மூலாதாரம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒன்றுகூடி சட்டவாக்கம் உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதும் நாட்டின் இயங்கு நிலைக்கான அத்தனை கருமங்களையும் ஆராய்வதையும் பாராளுமன்றம் செய்தாக வேண்டும்.

ஜனநாயகத்தின் அடிப்படையில் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதும், அவற்றுக்கு ஏனைய பிரதிநிதிகள் மதிப்பளிப்பதும் அவசியமாகும்.

எனினும் நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியபோது ஏற்பட்ட களேபரம் பாராளுமன்றம் என்றால் இப்படித்தானா? என்று நினைக்கும் அளவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைக் கேவலப்படுத்திவிட்டனர்.

கௌரவமான மக்கள் சபையை பிரதிநிதித்துவம் செய்வதால்தான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்று விழிப்பது வழக்கம்.

இவ்வாறு கௌரவமான பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்படி நடக்க வேண்டும் என்பதை மறந்து ரவுடிகள் போல பாராளுமன்றில் அடிதடியில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வுகளைப் பார்க்கின்ற மாணவர்கள் என்ன நினைப்பார்கள்? அவர்களுக்கான முன்மாதிரி எப்படியாக இருக்கிறது? என்பது பற்றிச் சிந்தித்தால், வேதனைதான் மிஞ்சிக்கொள்ளும்.

பாராளுமன்றத்தில் தர்க்க ரீதியாக விவாதிப்பது; மற்றவர்களின் கருத்துக்கு இடம்கொடுப்பது; மதிப்பளிப்பது என்பனவே ஜனநாயகப் பண்பாகும்.

எனினும் இலங்கைப் பாராளுமன்றில் பல சந்தர்ப்பங்களில் ஜனநாயகப் பண்புகள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்றுதான் நேற்று முன்தினம் பாராளுமன்றில் நடந்த களேபரமாகும்.

இவ்வாறான அநாகரிகச் செயல்கள் பாராளுமன்றத்தில் இடம்பெறுவதற்குக் காரணம் பொதுமக்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கவே செய்கின்றன.

அதாவது பொருத்தமற்றவர்கள், நீதியற்றவர்கள், சட்டத்தை மதிக்காதவர்கள் என்போரை தேர்தலில் வாக்களித்து வெற்றிகொள்ள வைத்தால், அவர்கள் இப்படித்தான் செய்வார்கள்.

எனவே, தேர்தலில் வாக்களிக்கும் முன் யாரை பாராளுமன்றத்திற்கு அனுப்பினால் அவர்கள் மக்கள் நலன் சார்ந்து செயற்படுவார்கள் என்பதை தீர அறிந்து அவர்களுக்கு வாக்களித்து நல்லவர்கள், வல்லவர்கள், பண்பானவர்கள் போன்றோரை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும்.

அப்போதுதான் பாராளுமன்றம் இதன் நோக்கை வெற்றிகரமாக செய்ய முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான இராணுவப் பாதுகாப்பை நீக்கியமைக்காக பாராளுமன்றத்தில் இத்துணை களேபரம் என்றால்,

எங்கள் மக்கள் வன்னிப் பெரு நிலப்பரப்பில் கொன்றொழிக்கப்பட்ட போது எத்துணை களேபரம் நடந்திருக்க வேண்டும்.

அப்போதெல்லாம் அது தமிழர்கள் என்று பேசாது இருந்தவர்கள் இப்போது தங்கள் சுயரூபத்தை காட்டியுள்ளனர். இதற்கு உரிய நடவடிக்கை இல்லாதவரை பாராளுமன்ற அமர்வுகள் ஆபத்தானவையாகவே அமையும்.

## நிதி நிறுவனங்களால் அதிக இழப்பீடு - ரணில்

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் நிதி நிறுவனங்கள் மூலம் நாட்டில் அதிகளவு இழப்பீடுகள் காணப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மிகப்பெரிய நிதி நிறுவனங்கள் அம்பாந்தோட்டை மற்றும் திஸ்ஸஹாராமவில் காணப்படுகின்றது.

ஆனாலும் நாட்டில் பரவியுள்ள மிகச்சிறிய நிதிநிறுவனங்கள் மூலமே மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு இயங்கும் சிறு நிதி நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களாகவே அதிகம் காணப்படுகின்றன.

இந் நிதி நிறுவனங்கள் மூலம் நடுத்தர மற்றும் உள்ளூர் மக்கள் அதிகளவு சுரண்டலுக்குள்ளாகின்றனர்.

இந்த மோசடிகள் தொடர்பில் இதுவரை எந்தவிதமான விசாரணைகளும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவில்லை என்ற போதிலும் இது குறித்து உடனே விசாரணை நடத்தப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். (செ-12)

## ஹெகலிய உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூவருக்கு எதிராக கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதவான கிஹான் பிலப்பிட்டிய முன்னிலையில்இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, கெஹெலிய ரம்புக்வெல்ல சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி மன்றில் பிரசன்னமாகாத காரணத்தினால் வழக்கை ஒத்திவைப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்தது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்படும் வகையில், 9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஜீ.ஐ.குழாய்களைக் கொள்வனவு செய்தமை குறித்து பிரதிவாதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான விமல் ரூபசிங்க மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே ஆகியோர் இந்த வழக்கின் ஏனைய பிரதிவாதிகளாகப்பெயரிடப்பட்டுள்ளனர். (செ-12)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் இவ்வருடம் க.பொ.த (உ/த) விஞ்ஞான பிரிவில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் தங்கள் பிள்ளைகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அதிபர் அறிவித்துள்ளார். (இ

## சுவாமி சின்மயானந்தரின் சிந்தனைத் துளிகள்



அன்புதான் இந்து மதத்தின் இதயம். மகத்தான இந்து சமுதாயத்தின் இளங் குழந்தைகளாகிய நாம் - அன்பு என்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இறைவன் அன்பின் முழுவடிவம். அன்பினைஉணர்ந்துகொண்டு, அனைவரிடமும் அன்பு காட்டும் முறையினையும் நமக்கு நாமே பயிற்றுவித்துக் கொண்டால் நம் இறைவனான பரமேஸ்வரனுக்கு நாம் சேவை செய்தவர்கள் ஆகிறோம். இதை விடச் சிறந்த பூஜை வேறு எதுவுமில்லை. ஆகையால் குழந்தைகளே அனைவரிடமும் அன்பாக இருங்கள்! அன்பு செலுத்துங்கள்.

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

**வினா இல.09**

(அ) யுத்த களத்தில் அர்ஜுனனுக்கு போரிடுவதா? வேண்டாமா? வெல்வோமா இல்லையேல் எதிர்த்தரப்பினர் வெல்வார்களா? என்ற தடுமாற்றங்கள் ஏற்பட்டதனை கீதையின் அத்தியாயம் இரண்டின் ஆறாவது ஸ்லோகம் வெளிப்படுத்துகின்றது. இதனால் நாம் அறிவது என்ன?

விடை: அர்ஜுனனின் மனமும் புத்தியும் சேர்ந்து இயங்கவில்லை.

(ஆ) இவை போன்ற தடுமாற்றங்கள் எமக்கும் பொருந்தும். இவற்றால் ஏற்படும் விளைவுகள் யாவை?

விடை: ஆளுமை சிதறும், குறித்த வேலையைச் சிறப்புற செய்ய இயலாமை, வெற்றி வாய்ப்புக்களை இழக்க நேரிடலாம், சரியாக முடிவெடுக்க முடியாமை

**வினா இல.10**


அத்தியாயம் இரண்டு ஸ்லோகம் ஏழு. இது வெளிப்படுத்தும் செய்தி என்ன?

விடை: அர்ஜுனன் தான் குழம்பியிருக்கிறேன் என உணர்ந்து கிருஷ்ணரிடம் சரணடைந்து தன்னை சீடனாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு மேன்மை பயக்கக்கூடியதை தனக்கு கூறுமாறு கேட்டமை.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண் கும்பான் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** வெளிக்குளம் பிரதேசம், குகன் நகர், ஊர்மிளா கோட்டம், ஸ்ரீரங்கன் ஆலை, நல்லதம்பி ஆலை, தெய்வேந்திரம் ஆலை ஆகிய பிரதேசத்திலும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து 5 மணி வரை யாழ்.குடாநாடு முழுவதிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### பூஜையில் பயன்படும் மணிக்கு பூஜை!

மணி அடித்து பூஜை செய்வது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அந்த மணிக்கே பூஜை செய்யவேண்டும் என்று பூஜா முறைகள் கூறுகின்றன. பூஜை ஆரம்பிப்பதற்கு முன்னால் மணி அடித்தால் அந்த மணி சப்தம் கேட்டதும் வீட்டில் ஏதாவது துர்தேவதைகள் போன்றவை இருந்தால் அது வெளியே ஓடிவிடும். துர்தேவதை போன்றவைகளுக்கு மணி சப்தம் கேட்டால் பயம். அதனால் மணி அடித்து அவைகளை விரட்டி விட்டு பூஜையை ஆரம்பிப்பர்.


ஒவ்வொரு நாளும் ஏன் இப்படி அடிக்கவேண்டும் என்றால் ஓடிப்போன துர்தேவதைகள் இருட்டிய பின் மீண்டும் ஒருவேளை வந்துவிடலாம். அவை இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே என்றால் அவை இருக்குமிடத்தில் தெய்வங்கள் வரமாட்டார்கள். தினமும் மணி அடிப்பதால் அந்த மணி துர்சக்திகளை முற்றிலுமாக விரட்டியடிப்பதோடு மட்டுமல்லாமல் தேவர்களையும் தேவ கணத்தினரையும் அழைக்கவே பூஜையின் போது மணியடிக்கவேண்டும் என்கிறது சாஸ்திரம். அதனால் மணியடித்துத்தான் தினமும் பூஜையை ஆரம்பிப்பது வழக்கம். பூஜையின் போது இறைவனுக்குப் படையல் போடுவதை நைவேத்யம், நிவேதனம் என்று சொல்வர். நிவேதனம் என்ற சொல்லுக்கு அறிவித்தல் என்று பொருள். அந்த அறிவிப்பை நமக்கு வெளிப்படுத்துவதே மணியாகும். கிராமங்களில்கூட இந்த துர்தேவதைகள் சுற்றிக்கொண்டே இருக்கும். அப்படிக் கோயில்களில் காலை, மாலை மணியடிக்கும்போது இந்த சப்தம் கேட்டதும் அந்த துர்தேவதைகள் கிராமத்தை விட்டு ஓடி விடும். இத்தகைய சிறப்புமிக்க அந்த மணிக்கே பூஜை செய்யவேண்டும் என்று பூஜா முறைகள் கூறுகின்றன. இந்த பூஜா மணியின் அதிதேவதை வாசுதேவ! மணியின் நாக்கிற்கு அதிதேவதை சரஸ்வதி! அடித்தல் அல்லது ஒலித்தலுக்கு அதிதேவதை சூரியன்! நாதத்திற்கு அதிதேவதை ஈஸ்வரன். எனவே மணிக்கும் பூஜை செய்யவேண்டும் என்கிறது சாஸ்திரம்.

**கண்டாமணி பூஜைக்கான மந்திரம்**

**ஆகமார்த்தம் து தேவாநாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம்**
**காண்டாரவம் கரோம்யத்ய தேவதாஹ் வானலாஞ்ச நம:**

உள்ளத்தில் தூய்மையான உணர்வு எழுவதற்கும் தீய உணர்வுகள் வெளியேறவும் மணியை ஒலிக்கிறேன் என்பதே அப்போது சொல்லும் ஸ்லோகத்தின் பொருள். மணி தொடர்ந்து ஒலிக்கும் இடத்தில் தீயசக்திகள் நீங்குவதோடு அந்த இடம் முழுவதும் நல்ல சக்தி அதிகரிக்கும் என்பது ஐதீகம்.

# முள்ளியவளை வித்தியானந்தா-கனகரத்தினம் மத்தி மோதும் நண்பர்களின் துடுப்பாட்ட சமர் நாளை ஆரம்பம்







முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படும் மாபெரும் துடுப்பெடுத்தாட்டப் போட்டியானது நாளை வெள்ளிக்கிழமை, நாளை மறுதினம் ஆகிய இரு தினங்களும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிமுதல் மாலை 5.45 மணி வரையும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரையும் போட்டி நடைபெறவுள்ளது. (க-302)

## இறுதிக்கு நுழைந்தது ரேவடி அணி



வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நேற்று சைனிங்ஸ்- ரேவடி அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் சைனிங்ஸ் அணியை 6 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்ட ரேவடி அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (கு)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

புற்றளை புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டிக்கு விளையாட்டு கழகங்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் கொண்டதாக மேற்படி போட்டி அமை யவுள்ளது. அனுமதி கட்டணமாக 800 ரூபா அறவிடப்படும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 643 2309, 077 518 3141, 077 797 0827 என் னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

★★★

உரும்பிராய் ஈகிள் விளையாட்டுக்கழகம் நடத்தவுள்ள அணிக்கு ஆறு பேர் ஐந்து ஓவர்கள் கொண்ட விலகல் முறையிலான மென்பந் தாட்ட சுற்றுத்தொடர் எதிர்வரும் சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்த தொடரில் உங்கள் பிரதேச அணிகளை பதிவு செய்ய கழகத்தின் தலைவர் வித்தி (077 013 2949) என்பவருடன் தொடர்பு கொள்ளவும். பதிவு கட்டணமாக 1000 ரூபா செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★★★

பருத்தித்துறை தும்பளை நாவ லர் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட் டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக் கிழமை கழக மைதானத்தில் ஆரம் பமாகவுள்ளது. அணிக்கு 10ஓவர் 11 வீரர்கள் கொண்ட சுற்றுப்போட்டியாக இத்தொடர் இடம் பெறவு ள்ளது.

அனுமதி கட்டணம் ஆயிரத்து 500 ரூபா ஆகும். முதல் பரிசாக 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் இரண்டாம் பரிசாக 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்மும் மூன்றாம் பரிசாக வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 3916059, 077 415 3144 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (கு)

# ஆனைக்கோட்டை ஜூனியன்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது யங்கம்பன்ஸ்



தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் ஆனைக்கோட்டை ஜூனியன்ஸ் வி.கழகத்துக்கு எதிராக விளையாடிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகம் முதல் பாதியாட்டம் தொடங்கி 15 ஆவது நிமிடத்தில் முதல் கோலை பதிவு செய்தார்.

நிறோ முதல் பாதியாட்டத்தில் 1:0 என்று முன்னிலை வகித்தது. யங்கம்பன்ஸ் இரண்டாவது பாதியில் நீண்ட நேரமாக விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இரண்டு அணியும் போட்டியை மாற்றும் நோக்கில் விளையாடியது ஆனைக்கோட்டை ஜூனியன்ஸ். அதற்கு இடம்கொடுக்கவில்லை யங்கம்பன்ஸ். போட்டியின் 30 ஆவது நிமிடத்தில் பிரகாஸால் இரண்டாவது கோல் போடப்பட்டது. தொடர்ச்சியாக கோல்களை போடுவதற்காக ஆனைக்கோட்டை முயற்சித்தது. அதனை முறியடித்தார் கோல் காப்பாளர் மகிந்தன். பல பந்துகளை விரட்டியடித்தார். ஆட்டம் 2:0 என்ற அடிப்படையில் தன்வசப்படுத்தியது யங்கம்பன்ஸ். (கு)

# அருள்ஒளி சிறுவர் வி.கழக கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## A,B வி.கழகம் சம்பியன்



அருள் ஒளி சிறுவர் விளை யாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்று போட்டியில் இறுதிப்போட்டியில் AB விளையாட்டு கழகத்தை எதிர்த்து வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டு கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற AB முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. வதிரி ஸ்ரீ முருகனின் சிறந்த பந்து வீச்சால் மந்தமான ஓட்டமே பெற்ற து. 10 ஓவர் நிறைவில் 52 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜிபராஜ் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி அணி ஆரம்பத்தில் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 3 ஓவரில் 24 ஓட்டங்களை பெற்று இருந்தது.

தொடர்ந்து அபாரமாக பந்து வீசிய AB வீரர்களின் பந்து வீச்சில் அனைத்து இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் பகி 3, பார்த்தி , விஸ்ணு தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கஜிபராஜ்ஜும் சிறந்த பந்து வீச்சாளராக பார்த்தீபனும் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டிகள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாம விக்கு மட்டும் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி எ.எல் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

## வாகன விபத்தில் மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் விபத்துக்குள்ளானதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் வட்டுக்கோட்டை சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மல்லாகம் சோடா கம்பனி ஒழுங்கையைச் சேர்ந்த வசந்த சந்திரன் ஸ்ராலின் (வயது 19) என்ற மாணவனே படுகாயமடைந்தவராவார். விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-30)

## விபத்துக்குள்ளான சிறுவன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற சிறுவன் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அச்சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணிளவில் யாழ்.நீராவியடி பிறவுண் வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் யாழ் கந்தர்மடம் சிவகுருநாதர் வீதியை சேர்ந்த சிவநேசன் யதுர்சன் (வயது 7) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-30)

## சான்றிதழ் மோசடி; கைதானவர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலிப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் 1991 ஆம் ஆண்டு சட்டவிதிமுறைகளுக்கு அப்பால் பிறப்புச்சான்றிதழ் வழங்கியதாக சந்தேகத்தின் பேரில் கடந்த மாதம் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில்,

குறித்த நபர் நேற்றையதினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் முதன்முறையாக ஆஜர் படுத்தப்பட்டார்.

இதன்போது இவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

யாழ். மாவட்டச்செயலகத்தில் குறித்த நபர் பணியாற்றிய போது கடந்த 1991 ஆம் ஆண்டு சட்ட விதிமுறைகளுக்கு அப்பால் பிறப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்கியுள்ளார் என சந்தேகத்தின் பேரிலேயே கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (செ-9)

## மாணவனுக்கு ரூ.50 ஆயிரம் நட்டஈடு வழங்குமாறு ஆசிரியருக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வரணிபகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவனை காலால் தாக்கி காயம் ஏற்படுத்திய ஆசிரியர் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு 50 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் என சாவகச்சேரி நீதிமன்றால் நேற்றையதினம் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருட முற்பகுதியில் வரணி பகுதியில் உள்ளபாடசாலை ஒன்றில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வின்போது மாணவன் ஒருவன் சிறு கல்லால் மற்றுமொரு மாணவன் மீது எறிந்துள்ளான்.

அதனை அவதானித்து வைத்திருந்த கல் எறிவாங்கிய மாணவன் சிறிது நேரத்தில் எறிந்த மாணவனை தேடி அவனின் வகுப்பறைக்குள் சென்றுள்ளான்.

இந் நிலையில் குறித்த வகுப்பறையில் மேற்படி ஆசிரியர் வகுப்பில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்துள்ளார். அப்போது கல எறிவாங்கிய மாணவன் கல்லெறிந்த சக மாணவனை தாக்கியுள்ளான்.

இதனை அவதானித்த ஆசிரியர் தான் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அத்துமீறி ஏன் வகுப்பறைக்குள் வந்து எனது வகுப்பில் இருந்த மாணவனை தாக்கினாய் என கேட்டு சப்பாத்துக் காலால் தாக்கியதாக கூறபபடுகிறது.

பாதிப்புக்குள்ளான மாணவன் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் ஆசிரியர் கொடிகாமம் பொலிஸாரினால் கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் நேற்றையதினம குறித்த சம்பவத்திற்கு குற்றப்பத்திரம் மன்றில் வாசிக்கப்பட்டது.

ஆசிரியர் தனது குற்றத்தினை ஏற்றுக்கொண்டதை அடுத்து, பாதிககப்பட்ட மாணவனுக்கு 50 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்க நீதிபதி உத்தரவிட்டார். (செ-9)

## கோத்தா மீதான குண்டு தாக்குதலை அவரே நடத்தியிருக்கலாம் - சரத்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வாகன தொடரணி மீது நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலானது அவராலேயே திட்டமிடப்பட்டதொன்றாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக அமைசசர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுபபினருமான மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காகவிருந்த விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட இராணுவத்தினர் நீக்கப்பட்டமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்துவெளியிட்டதை தொடர்ந்து மேலதிக விடயங்களை கூறுமாறு பீல்ட் மார்ஷல் சரதபொன்சேகாவிடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை சபையில் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சந்தேகம் வெளியிட்டார். அவர் உரையாற்றுகையில்,

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் காரின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் சந்தேகம் இருக்கிறது.

பயங்கரவாதிகள் ஒருபோதும் 25 மீற்றர் தூரத்துக்கு அப்பால் வைத்து குண்டை வெடிக்க வைக்க மாட்டார்கள்.

அதுமட்டுமல்லாது, குண்டுதுளைக்காத காரின் மீது குண்டுத் தாக்குதல் நடத்துமளவுக்கு பயங்கரவாதிகள் முட்டாள்களும் அல்ல.

எனவே, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரே இந்தத் தாக்குதலை திட்டமிட்டு செய்திருக்கக் கூடும் என்ற சந்தேகமுள்ளது எனச் சுட்டிக்காட்டினார். (செ-12)

## 16 வயது பெறாமகள் மீது பெரிய தந்தை துஷ்பிரயோகம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பொலிகண்டி பகுதியில் தாய் தந்தையினை இழந்து பெரியம்மாவுடன் வாழ்ந்து வந்த பெறாமகள் முறையிலான 16வயது சிறுமியினை பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்த குற்றச்சாட்டில் சிறுமியின் பெரியதந்தையாரினை வல்வெட்டித்துறை பொலி ஸார் சந்தேகத்தின் பேரில் நேற்றையதினம் கைதுசெய்துள்ளனர்.

தாய் தந்தையினரை தனது சிறுவயதிலேயே இழந்து தனது பெரிய தாய் தந்தையுடன் வாழும் மேற் படி சிறுமியினை கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து பெரியதாய் வியாபாரத்தில் ஈடுபடசென்ற சமயங்களில் பெரியதந்தை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திவந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந் நிலையில் நேற்றைய தினம காலை வேளை பெரியதந்தை சிறுமியினை துஷ்பிரயோகம் செய்வதை பெரியதாய் கண்ணுற்றுள்ளார்.

இது தொடர்பில் சிறுமியிடம் கேட்டபோது சிறுமி நடந்தவற்றை கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி பெரியதாயின் உதவியுடன் வல்வெட்டித்துறை பொலிஸில் செய்தமுறைப்பாட்டின் அடிப்படையில் 51 வயதுடைய பெரியதந்தை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் கைதான சந்தேக நபரான பெரிய தந்தையினை இன்றையதினம் பருத்தித்துறை மாவட்டநீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (செ-9)

## நல்லாட்சியை கவிழ்ப்பதாக...

விக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை குறைப்பது தொடர்பான தீர்மானம் தற்போது நாட்டில் பாரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்கு வைத்து தமிழ்ழ விடுதலை புலிகள் நடத்திய தாக்குதலில் அவர் ஒரு கண்ணை இழந்தார்.

அவ்வாறு அவருக்கு அச்சுறுத்தல் நிலவிய காலப்பகுதியில் அவரது பாதுகாப்பை அறுபதிலிருந்து, முப்பதாக குறைக்க மகிந்த ராஜபக்ஷ நீதிமன்றத்திற்கு சென்றார்.

அதுமட்டுமின்றி யுத்த வெற்றிக்கு பாரிய பக்கபலமாக விளங்கிய இராணுவத் தளபதி சரத் பொனசேகாவை சிறைக்கு அனுப்பி மகிழ்ந்தார். இது அவர் இராணுவத் தளபதியாக இருந்தபோது நிகழ்ந்த அவலம். பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பிற்கே தற்போது வெறும் 15 பொலிஸ் அதிகாரிகள் மாத்திரமே உள்ளனர்.

ஆனால் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ இராணுவ பாதுகாப்பை வைத்துக் கொண்டு விகாரைகள் தோறும் சென்று மதகுருமார்கள் மற்றும் மக்கள் மத்தியில் குழப்பத்தை விளைவித்து வருகிறார்.

இவர் இராணுவ பாதுகாப்பைக் கொண்டு இந்த ஆட்சியைக் கவிழ்க்கலாம் என எண்ணி கனவு கண்டுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இது வெறும் பகல் கனவு என்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் கூறிக் கொள்ள விரும்புகிறோம் எனக் குறிப்பிட்டார். (செ-12)

## 9 கொலைச் சந்தேக நபர்...

பாலியல் வல்லுறவு கொலை வழக்கில் பூபாலசிங்கம் இந்திரகுமார், கோபாலசிங்கம் ஜயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசீந்திரன், தில்லைநாதன் சந்திரகாந்தன், சிவதேவன் துஷாந்தன், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜயதரன் கோகிலன், ஒன்பதாவது சந்தேக நபர் சுவிஸ் குமார் என அழைககப்படும் மகாலிங்கம் சசிக்குமார் இந்த 9 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

விளக்கமறியலில் தடுத்து வைக்கப்ட்டுள்ள இந்த சந்தேக நபர்களின ஒரு வருடத்துக்கான விளக்கமறியல் காலம் எதிர் வரும் 11ஆம் திகதியுடன் முடிவுறுகின்றது.

இந்த நிலையில் இவர்களது விளக்கமறியல் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு நீதவான் நீதிமன்றத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு, பிணைச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இந்த மனு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்படுவதாக அரச சட்டவாதி ஜனாப் சக்கி இஸ்மாயில் மன்றில் தெரிவித்தார்.

இந்த சந்தேக நபர்களின் விளக்கமறியல் காலத்தை 3 மாதத்திற்கு ஒரு தடவையாக ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு உத்தரவிட வேண்டும் என்றும் அரச சட்டவாதி தனது விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்த சந்தேக நபர்கள் 9 பேரினதும் விளக்கமறியல் உத்தரவை முதலில் 3 மாதங்களுக்கு நீடிபதற்கான விசாரணை நடத்துவதற்கு சந்தேக நபர்களை மேல் நீதிமன்றத்தில் ஆஜராக்குவதற்கு உத்தரவிடுமாறும் அரச சட்டத்தரணி மன்றில் கோரினார்.

இதனையடுத்து இந்த வழக்கின் சந்தேக நபர்கள் 9 பேரினதும் விளக்கமறியல் காலத்தை நீடிப்பதா என்று விசாரணை செய்வதற்கு எதிர்வரும் 11 ஆம் திகதி புதனகிழமை அவர்களை நீதிமன்றில் ஆஜராக்குமாறு அனுராதபுரம் மறியற்சாலை அத்தியட்சகருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அன்றைய தினம் நீதிமன்றத்தை விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புக்கு உட்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்ற சுற்று வளாகப் பகுதியில் பொலிஸாரின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்றும் யாழ் பிரதிப் பொலிஸ் மா அதிபருககு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

புங்குடுதீவு வித்தியா பாலியல் வல்லுறவு கொலை வழக்கில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு ஓராண்டு எதிர்வரும் 15 ஆம் திகதி முடிவுறும் தறுவாயில் பிணைச்சட்டத்தின் 17 ஆவது உறுப்புரையின் கீழ் விளக்கமறியல் காலத்தை மேலும் நீடிக்கும் அதிகாரம் மேல் நீதிமன்றத்திற்கே வழங்கப்பட்டுள்ளது என்ற சட்டப்பரிந்துரையின் அடிப்படையிலேயே சட்டமா அதிபர் யாழ் நீதிமன்றில் இந்த விசேட மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## அதிபர்களின் கோரிக்கைக்கு...

காரணமாக சில பாடசாலைகளில் மாணவர்களின் வகுப்பறைகள் பாதுகாப்பிற்கு உகந்ததில்லை என்றும்,

இக் காலநிலையானது இன்னும் சிலநாட்களில் மாற்றமடைவதற் குரியவாய்ப்புக்கள் உண்டு. எனவே இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அவரவர் ஆளுமைக்குட்பட்ட பாடசாலை அதிபர்களின் கோரிக்கைக்கு அமைவாக பாடசாலைகளை மதியம் 12 மணி வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கும்படி தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன் வெப்பநிலையானது மதியம் 12 மணிக்கு மேல் அதிகரித்து காணப்படுவதால் பாடசாலைகளை மூடி மாணவர்களை வீடுகளிற்கு அனுப்பும் போது அதிகரித்த வெப்ப நிலையின் தாக்கத்திலிருந்து அவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இது ஒரு தற்காலிக ஏற்பாடாகவே அமையும் என்பதுடன் நேரகாலத்துடன் மூடப்படுகின்ற பாடசாலைகள் தாங்கள் இழந்த கல்வியை ஈடுசெய்வதற்காக பதில் பாடசாலைகளை நடத்த வேண்டியிருக்கும் என்பதை சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு அறிவுறுத்தவும் எனவும் வடக்கு கல்வியமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## பேரவையின்...

யின் கட்டாய தேவையையும் வலியுறுத்தினர்.

இதன்போது இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஒரு நல்லிணக்கத்தைக்கொண்டு வருவதற்கான முக்கியத்துவம் விவாதிக்கப்பட்டு அதற்குபொறுப்புக் கூறல் எவ்வளவு முக்கியத்துவமானது என்பது பேரவையின் குழுவினரால் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது மட்டுமன்றி இதற்கு சர்வதேச விசாரணையின் அவசியமும் தெளிவான காரணங்களுடன் கூறப்பட்டதுடன் இது சம்பந்தமான பேரவையின் வருங்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் எடுத்துக் கூறப்பட்டன. (ந)

## பாராளுமன்றத்தின்...

பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பொறுப பாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு முழுமையான மனிதனிடம் இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்பு ஒழுக்க மும் முதிர்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மேன்மை பொருந்திய பாராளு மன்றத்திற்கு மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள எல்லோரும் அது குறித்த தெளிவுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டார்.

நேற்று காலை ஹொரணை ரோயல் கல்லூரியின் புதிய கேட்போர் கூடத்தை மாண வர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு ஒழுக்கப் பண்பாடான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்குப் பொருத்தமானவர்களுக்கு தமது பெறுமதியான வாக்குகளைப் பயன்படு த்த வேண்டியது மக்களுக்குள்ள பொறுப் பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முற்பகல் ஹொரணை ரோயல் கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதியினை கல் லூரி மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்று கல்லூரிக்கு அழைத்துச் சென்றனர.

பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்து ஜனாதிபதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கேட் போர் கூடத்தினை மாணவர்களிடம் கையளி த்தார்.

இந்த நிகழ்வை நினைவுகூரும் வகை யில் கல்லூரி வளாகத்தில் நாக மரக்கன்று ஒன்றும் நடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிக ழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனா திபதி, இலவசக்கல்வி மற்றும் இலவச சுகா தார சேவைக்கான ஏற்பாடுகளை ஒதுக்குகின்ற போது அதனை மிகவும் முறையான ஒரு ஒழுங்கில் மேற்கொள்வது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனக் குறிப்பிட்டார்.

1987 ஆம் ஆண்டு 80 மாணவர்களு டன் ஆரம்பிக்கப்பட்ட ஹொரணை ரோயல் கல்லூரியில் தற்போது சுமார் 4300 மாண வர்கள் கல்வி கற்கின்ற அதேநேரம், அன்றி லிருந்து இன்றுவரையான கல்லூரியின் அடைவுகள் ஜனாதிபதியினால் பாராட்டப்பட் டது.

ஜனாதிபதியின் வருகையை நினைவு கூரும் வகையில் அதிபர் ஏ.ஏ.பி.எல் குண திலக்கவினால் ஜனாதிபதிக்கு ஒரு விசேட நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

அமைச்சர் மகிந்த சமரசிங்க, பாராளு மன்ற உறுப்பினர் மலித் ஜயதிலக்க, மேல் மாகாணசபை அமைச்சர்களான ரஞ்சித் சோமவம்ச, சுமித் லால் மெண்டிஸ், மேல் மாகாண சபை உறுப்பினர்களான கித்சிரி கஹட்டபிட்டிய, நிமல் சந்திரரத்ன உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அதிபர், ஆசிரியர் கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-12)

## யாழுக்கு...

கைப்பற்றியுள்ளதோடு சந்தேக நபர்களை யும் கைது செய்துள்ளனர்.

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய பண்டி விருச்சான் காட்டுப்பகுதிக்குள் சட்ட விரோதமான முறையில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரங்கள் வெட்டப் பட்டு யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்வத ற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மடு பொலிஸாருக்கு கிடை க்கப்பெற்ற விசேட தகவலின் அடிப்படையில் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜட்டவலவின் பணிப்புரைக்கு அமை வாகவும், உதவி பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்ததில் மடு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ்.பி.வி.மடவல தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் அதிகாலை பண்டிவிரு ச்சான் காட்டுப்பகுதிக்குள் சென்று தேடுதல் களை மேற்கொண்டனர்.

இதன்போது சட்டவிரோதமான முறை யில் வெட்டப்பட்டு லொறியில் ஏற்றப்பட்டு உமி மூடையினால் மறைத்து வைத்து யாழ்ப்பா ணத்துக்கு கொண்டு செல்லப்படவிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை மீட்டதோடு, சட்டவிரோத மான முறையில் மரம் வெட்டிய இருவரை யும் பொலிஸார் கைது செய்தனர்.

அத்தோடு மரக்குற்றிகள் ஏற்றப்பட்ட லொறி மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் என்பன மடு பொலிஸ் நிலை யத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு லொறி முழுமையாக சோதனையிடப்பட்ட போது பல இலட்சம் ரூபாய் பெறுமதி யான 47 முதிரை மரக்குற்றிகள் உமி மூடைகளினால் மறைத்து வைக்கப்ப ட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

கைது செய்யப்ப ட்ட இரு சந்தேக நப ர்களும் பண்டிவிரு ச்சான் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. குறி த்த இரு சந்தேக நபர்களும் நேற்று முன் தினம் மதியம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது குறித்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணை களை மடு பொலிஸார் மேற்கொண்டு வரு வதாக மடு பொலிஸ் நிலையத்தின் பொறுப் பதிகாரி ஆர்.எம்.எஸ்.பி.வி.மடவல மேலும் தெரிவித்தார். (செ-4)

## 18 கைதிகளுக்கு...

கைதிகளுக்கு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(செ-12)

## ருவானுக்கு எதிராக...

பிச் சென்றிருக்கலாம் என பொலிஸ் பேச்சா ளர் ருவான் குணசேகர அண்மையில் தெரிவித்திருந்ததை அடுத்து, பொலிஸாரின் ஊடகப்பிரிவு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் முடக்கப்பட்டது.

இந்நிலையில், ருவான் குணசேகரவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு மூன்று நாட்களுக்குள் விசா ரணை அறிக்கையைத் தன்னிடம் சமர்ப் பிக்குமாறு அமைச்சர் சாகல ரத்நாயக்க உத் தரவிட்டுள்ளார். (செ-12)

## மோதலில் ஈடுபட்ட...

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர் பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால மற்றும் நாடா ளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல் வம் அடைக்கலநாதன் ஆகியோரைக் கொண்ட குழு நேற்று முன்தினம் சபாநாயக ரால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர், நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கைகலப்பு இடம்பெற்ற போது, எடுக்கப்பட்ட காணொலிக் காட்சிகளின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கையை நேற்று சபாநாயகரிடம் கைய ளித்தது.

இந்த அறிக்கையில், நாடாளுமன்ற உறு ப்பினர்கள், பாலித தேவாரப்பெரும மற்றும் பிரசன்ன ரணவீர ஆகியோரே மோதல் சம்ப வங்களுக்குக் முதற் காரணமானவர்கள் என் றும் அவர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் சபாநாயகருக்கு பரிந்துரைக்க ப்பட்டுள்ளது.

இதேவேளை நாடாளுமன்ற சபை அமர் வின்போது நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவம் தொட ர்பில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரி டம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற் றுள்ளனர். கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினாலேயே மேற்படி வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
50,000/- வரை வருமானத்துடன்
உடனடி வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE >>> English Course
Up to 30% Discount
3 - 4 மாதங்களில்
, பகுதிநேர / முழு நேர தொழில் ஏற்பாடு.
, வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
100% JOB or VISA Guaranteed
கற்கைநெறி ஆரம்பம் 11th May 2016
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
முழு விபரங்களுக்கு www.sikaram.lk
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(சி-4520)




வேலையாள் தேவை
பிரபலமாக இயங்கி வரும் மோட்டார் சைக்கிள் திருத்து நிலையத்துக்கு அனுபவம் மிக்க மோட்டார் சைக்கிள் திருத்துநர் [மெக்கானிக்] தேவை
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
உணவு, தங்குமிடவசதி செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 076 833 9898
(C4519)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் நல்லான் ஏகாம்பரம்

(ஏரம்பு)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31 | 04 |
| - | - |
| 12 | 05 |
| - | - |
| 1968 | 2016 |



NEW SCIENCE HALL கல்வி நிறுவனத்தில் பணியாற்றிய நல்லான் ஏகாம்பரம் அவர்களின் திடீர் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவலர் வீதி,
பிறவுண் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

NEW SCIENCE WORLD
இயக்குநர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள்.

(சி-4518)

## அறிவித்தல்

பரு/ தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த வெளிமடைப் பொங்கல் - 2016

- விளக்கு வைப்பு : 2016.05.06-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி
- வெளிமடைப் பொங்கல் : 2016.05.13-ம் திகதி வெள்ளிக்கிழமை, 2016.05.14-ம் திகதி சனிக்கிழமை

★ மேற்படி வெளிமடைப் பொங்கல் காலப் பகுதியில் தற்காலிக வியாபாரம் செய்ய நிலத்தினைக் குத்தகை எடுக்க விரும்புவோர் எதிர்வரும் 2016.05.11-ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, மேற்படி கோவிலின் அலுவலகத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

ஆ.சிவகுமாரன் (பொருளாளர்) | இ.சிவபுண்ணியம் (செயலாளர்) | சபா ரவீந்திரன் (தலைவர்)

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தர்ம பரிபாலன சபை (C-4515)


விற்பனைக்கு
➤ யாழ் நகரின் வர்த்தக மையப்பகுதியில் HNBக்கு அருகாமையில் 10 அடி அகலம் 100 அடி நீளம் கட்டடத்துடன் கூடிய கடை விலை 30 மில்லியன் ரூபாய்.
➤ யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 14 அடி அகலம் 100 அடி நீளமும் கூடிய இருமாடிக் கடைக்கட்டடத்துடன் கூடிய கடை விலை 40 மில்லியன்.
➤ யாழ் கே.கே.எஸ் வீதியில் மனோகரா தியேட்டருக்கு அண்மையில் 6 பரப்புக் காணி 40 மில்லியன் ரூபாய்.
➤ யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் 5 பரப்புக் காணியில் அமைந்த வீடும் 20 மில்லியன் ரூபாய்.
➤ யாழ்ப்பாண நீதிமன்றத்துக்கு முன்னால் 2 பரப்புக்காணி 8 மில்லியன் ரூபாய்
தொடர்பு:0774 752 535
கனகசபை தர்மகுலசிங்கம்
175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(C-4510)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.